Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 145 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 27ஆம் திகதி புதன்கிழமை (11.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 18, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.60



## 14 வருடங்களின் பின்னர்

02 பக்கம்

## தமிழ் அரசியல் கைதி விடுதலை!

## உஷ்



தேர்தல் தொடர்பில் பேச்சு நடத்த ஜனாதிபதி அழைத்தால் ஜனாதிபதி செயலகத்திற்கு செல்லாமல் பல பிரதிநிதிகள் சகிதம் வேறு இடமொன்றில் பேச்சு நடத்த தேர்தல் ஆணைக்குழு உத்தேசித்துள்ளதாம்.

ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழுவை அழைத்து ஜனாதிபதி நடத்திய பேச்சு தொடர்பில் ஊடகங்களில் பல்வேறு தகவல்கள் வெளிவந்துள்ளதால் இவ்வாறு தற்பாதுகாப்பு முறையை கையாள தீர்மானித்துள்ளதாம் ஆணைக்குழு.

# கூட்டமைப்பில் பிரிவு: தமிழரசு தனி வழி!



## உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கட்சி ஒருங்கிணைப்புக் குழு அதிரடி முடிவு

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்துசென்று, தனித்துப் போட்டியிடுவதென தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்மூலம், 2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று மீண்டும் பிளவை சந்தித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உடன்பாடு எட்டப்படாததையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறியுள்ளது.

தாம் தனித்துப் போட்டியிடப் போவதாக தமிழரசுக் கட்சி தெரிவித்து, கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம்,... 02 பக்கம்

## அமைச்சரவைத் தீர்மானங்கள்!




### 09.01.2023 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்கான தேசிய வலுசக்தி ஆற்றல்கள், மூலோபாயங்கள் மற்றும் திட்டவரைபு**

வலுசக்தித் துறையை நிலைபெறுதகு வகையில் அபிவிருத்திசெய்யும் நோக்கில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை அடையாளங்கண்டு பொருத்தமான பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கும், குறித்த பரிந்துரைகளின் அடிப்படையில் அமைச்சரவையால் எட்டப்படுகின்ற தீர்மானங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் பின்னூட்டல்களை மேற்கொள்வதற்காக 30.08.2022ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த உபகுழு ஏற்புடைய பங்கீடுபாட்டு நிறுவனங்கள், துறைசார் தொழில் நிபுணர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் ஒருசில கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மின்சக்தி மற்றும் வலுசக்தி துறைசார்ந்த பரிந்துரைகள் மற்றும் திருப்புமுனைகள் உள்ளடங்கலான திட்டவரைபொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. 75ஆவது சுதந்திர தின வைபவம்**

2023 பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கும் 75ஆவது சுதந்திர தின வைபவம் மற்றும் அதற்கு இணையாக அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்புகள் மற்றும் கடமைகள் உள்ளிட்ட நிகழ்ச்சித்திட்டத்தை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

**03. 2023 மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்கான முன்மொழிவுகள்**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த மின்கட்டணத் திருத்தம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் அமைச்சரவையால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது நிலவுகின்ற நிதிநிலைமையின் கீழ் மின்சார சபைக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு திறைசேரிக்கு இயலாமையால், நாட்டில் தொடர்ச்சியான மின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக மின்பாவனையாளர்களுக்கு ஏற்படுகின்ற தாக்கங்களை இயன்ற வரை குறைத்து மின்விநியோகத்தை மேற்கொள்வதற்கான செலவை... 07 பக்கம்

## சட்டக் கல்லூரி பரீட்சைக் கட்டணம் அதிகரிப்பு

இலங்கை சட்டக் கல்லூரியின் 2023ஆம் ஆண்டுக்கான பொது நுழைவுப் பரீட்சைக் கட்டணம் 15,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

6,000 ரூபாவாக இருந்த கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், சட்டக் கல்விக்கான ஒருங்கிணைந்த கவுன்சிலால் கையொப்பமிடப்பட்டு ஜனவரி 5ஆம் திகதி வெளியிடப்பட்டது. வர்த்தமானியின் பிரகாரம், பதிவுக் கட்டணம், அனுமதிக் கட்டணம், விரிவுரைக் கட்டணம் உள்ளிட்ட பல கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## தாயின் தங்கச்சங்கிலியை கொள்ளையிட்ட போதைக்கு அடிமையான மகன் கைது

•கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரப் பகுதியில் போதைக்கு அடிமையான ஒருவர் போதைப்பொருள் வாங்க, அவரின் தாயின் 5 பவுண் தங்கச்சங்கிலியை கழுத்திலிருந்து அறுத்துக் கொள்ளையிட்டவரை நேற்று முன்தினம் (09) கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார தெரிவித்தார்.

குறித்த நபர் மாங்காட்டு பிரதேசத்தில் திருமணம் முடித்து வாழ்ந்துவரும் நிலையில், போதைப்பொருளுக்கு அடிமையாகி, கடந்த 2ஆம் திகதி நகரப் பகுதியில் வாழ்ந்துவரும் தாயாரின் வீட்டுக்குச் சென்று பணம் கேட்டுள்ளார்.

தாய் பணம் இல்லை என்றதும் தாயாரின் கழுத்திலிருந்த 5 பவுண் தங்கச்சங்கிலியை பறித்துச் சென்றுள்ளார். 02 பக்கம்

## திறைசேரிக்கு கடும் நிதி நெருக்கடி:

- ★ அமைச்சுகளுக்கான ஒதுக்கீடு 5 வீதத்தால் குறைப்பு
- ★ இம்மாத சமுர்த்தி கொடுப்பனவு இரு வாரங்களுக்கு தாமதம்

•நா.தினுஷா

எதிர்பார்த்ததைவிட, 2023ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் திறைசேரி கடும் நிதி நெருக்கடியை சந்தித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

ரணில் ஆட்சியில் இருக்கும் போது முதலில கருணா... பிறகு பொதுஜன பெரமுன, இப்போ தமிழ்க் கூட்டமைப்பு ...



## மின் கட்டணம் அதிகரித்தால் தேயிலை தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயம்



மீண்டும் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டால் அரைவாசிக்கும் மேற்பட்ட தேயிலை தொழிற்சாலைகள் நிரந்தரமாக மூடப்படுமென தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் லயனல் ஹேரத் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## அரச ஊழியர்களின் சம்பளம் குறித்து அச்சம் வேண்டாம்!

### நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்



அரச ஊழியர்களின் சம்பளம் அல்லது சமுர்த்தி உதவி நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பில் தேவையற்ற அச்சம் தேவையில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## சபரிமலைக்கு செல்லவிருந்த நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

•த.யுவராஜ்

சபரிமலை கோவிலுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற நபர் ஒருவர் விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபரின் பொதி ஒன்றில் ரி-56 ரக துப்பாக்கியின் தோட்டா காணப்பட்டதையடுத்தே சந்தேகத்தின்பேரில் இவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் நிலையத்தில்... 02 பக்கம்




## அத்திப்பட்டியாகும் உத்தரகாண்டின் ஜோஷிமத்

12 பக்கம்

### முழு கிராமமே நிலத்துக்குள் புதையும் அபாயம்; மக்களை அகற்றும் பணி தீவிரம்!



## ஹிஸ்புல்லாஹ் மு.காவில் இணைவு



•றிப்தி அலி

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நேற்று (10) செவ்வாய்க்கிழமை இரவு ஓட்டமாவடியில் வைத்து... 02 பக்கம்

## பெரமுன- ஐ.தே.க. கூட்டணி அறிவிப்பு

### முக்கிய நகரங்களில் யானைச் சின்னத்தில் போட்டி

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஒரே கூட்டணியாக போட்டியிடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

புதிய கூட்டணி சில உள்ளூராட்சி சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்திலும், சில சபைகளில் பெரமுன சின்னத்திலும் போட்டியிடவுள்ளதாக... 02 பக்கம்

ஐக்கிய தேசியக் கட்சி

UNITED NATIONAL PARTY

## தேர்தல் நிதிப் பொறுப்பை அரசும் நாடாளுமன்றமும் ஏற்க வேண்டும்!

### தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன்

•நா.தினுஷா

தேர்தலை நடத்துவதற்கான நிதிப் பொறுப்பு ஆணைக்குழுவுக்குரியதல்ல. அரசியலமைப்பின் பிரகாரம் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளுக்கமைய தேர்தலுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கிறோம். 02 பக்கம்

## பிரசார நடவடிக்கைக்கு அரச சொத்துகளைப் பயன்படுத்தாதீர்!

### அரசியல்வாதிகளுக்கு பெவ்ரல் எச்சரிக்கை

•நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச பொது சொத்துகளைப் பயன்படுத்துவது தொடர்பில் முறைப்பாடுகள் பதிவாகி வருகின்றன. தேர்தல் நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சொத்துகள்... 02 பக்கம்

# வேட்புமனுக்கள் ஏற்பதை நிறுத்த அரசு திடீர் உத்தரவு

## சஜித் கடும் கண்டனம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளதுடன், தேர்தல் அதிகாரிகள் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் பணியை முன்னெடுத்துள்ளதாகவும் இவ்வாறான நிலையில், மறு அறிவித்தல் வரும்வரை தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்பதை நிறுத்துமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் உத்தரவிட அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது மக்களின் ஜனநாயக உரிமைகளை முழுமையாக மீறுவதுடன், மக்களின் இறையாண்மைக்கு எதிரானது எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இது மாளிகைச் சதிகளின் விளைவு எனவும் தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடைமுறைகளைப் பேணுவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சரவை எடுத்த தீர்மானம் அரசியலமைப்பை மீறும் சட்டவிரோதமான தீர்மானமாகும் எனவும் தெரிவித்தார்.

மக்களின் இறையாண்மை மற்றும் ஜனநாயகத்தை மீறும் வகையில் அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த தன்னிச்சையான செயற்பாட்டிற்கு எதிராக நாட்டு மக்களுடன் முன் நிற்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார் எனவும் அவர் தெரிவித்தார்.





**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4:00 மணிக்கு மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.ஏ. ஹரிஸ், பைஷல் காசிம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஷாஹிர் மௌலானா, எம்.ஐ.மன்சூர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பர், முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, பிரதேச உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.(கே.ஏ.ஹமீட்)**

### 14 வருடங்களின் பின்னர்...

விடுதலைப்புலிகளுக்கு அதிநவீன தொழில்நுட்பக் கருவிகளை கடத்தியதாக 2009ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட வழக்கில், தமிழ் அரசியல் கைதியொருவர் 14 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தை அடுத்து 14 வருடங்களின் பின்னர் அரசியல் கைதி கனகரத்தினம் ஆதித்யன் என்பவரே விடுதலை செய்யப்பட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்காக 2007ஆம் ஆண்டு சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கையடக்க வானொலிகள் உட்பட சில நவீன தொழில்நுட்ப உபகரணங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமையகத்தில் ஒப்படைக்க வவுனியா இரட்டை பெரிய குளத்தடியில் WPC 7711 இலக்க லொறியில் வரும்பொழுது வவுனியா பொலிஸாரினால் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, மேலதிக விசாரணைக்காக கொழும்பு குற்றப் புலனாய்வுத் துறைக்கு கையளிக்கப்பட்டதாக பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

2009ஆம் ஆண்டு இந்த குற்றச்சாட்டுகளுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைத்து விசாரணை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான கனகரத்தினத்தின் மகனான ஆதித்யன் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தையடுத்து கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதியினால் 14 வருடங்களின் பின்னர் நிரபராதியென நேற்று விடுதலை செய்யப் பட்டார்.

இவ்வழக்கின் எதிரியான கனகரத்தினம் ஆதித்யன் சார்பில் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஸ் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மன்றில் ஆஜராகினார்.

இதேவேளை, ஏனைய வழக்குகளில் அவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் தொடர்பான மற்றொரு வழக்கு நாளை விசாரணைக்கு வருகிறது.

### அரச ஊழியர்களின்...

அரசின் வருவாய் மற்றும் செலவினங்களை நிர்வகிப்பதில் அரசு ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென நிதியமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஹிஸ்புல்லாஹ் மு.காவில்...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையிலேயே முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட், அக்கட்சியிலிருந்து விலகி, ஆளும் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர் பதவியைப் பெற்றுள்ளார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் நோக்கிலேயே முன்னாள் ஆளுநர் முஸ்லிம் காங்கிரஸில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடாக 1989ஆம் ஆண்டு நாடாளுமன்றம் நுழைந்த ஹிஸ்புல்லாஹ் பிரதி அமைச்சர், மாகாண அமைச்சர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் மற்றும் ஆளுநர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

அத்துடன் 2019ஆம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் இவர் போட்டியிட்டார்.

### பெரமுன - ஐ.தே.க கூட்டணி...

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

பெசில் ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் குழு சில நாட்களுக்கு முன்னர் ஐ.தே.க. உறுப்பினர்கள் குழுவைச் சந்தித்ததுடன், கூட்டாகப் போட்டியிடும் தீர்மானம் அந்தக் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டது.

கொழும்பு கண்டி மாநகர சபைகளிலும் புத்தளம் நகர சபையிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் இந்தக் கூட்டணி தேர்தலில் போட்டியிடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### சபரிமலைக்கு செல்லவிருந்த...

ஒப்படைக்கப்பட்டதாக விமான நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் 47 வயதான ஹட்டனை வசிப்பிடமாக கொண்டவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது வத்தளை பிரதேசத்தில் அமைந்துள்ள இரும்பு விற்பனை நிலையம் ஒன்றில் இந்த இரும்புகளை சந்தேகநபர் கொள்வனவுசெய்து, அவற்றை இந்தியாவுக்கு கொண்டுசென்று விற்பனை செய்யவிருந்தமை தெரியவந்துள்ளது.

இதேவேளை, சந்தேகநபரின் இரும்புப் பொதிக்குள்ளேயே ரி-56 ரக துப்பாக்கி தோட்டா கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### மின் கட்டணம் அதிகரித்தால்...

இது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போது நாடு முழுவதும் கிட்டத்தட்ட 500 தேயிலை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

உரப் பிரச்சினை மற்றும் காலநிலை காரணமாக தேயிலை உற்பத்தி ஏற்கனவே குறைந்து, வருமானம் குறைந்துள்ள இவ்வேளையில் மின்கட்டணத்தை அதிகரித்தால் தேயிலை கைத்தொழில் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதம் முதல் மீண்டும் மின் கட்டணம் உயர்த்தப்படவுள்ளதாக மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் (9) அங்கீகாரம் வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர் குறித்த எழுத்து மூலம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

மின் கட்டண உயர்வுக்கு நாடு முழுவதும் தற்போது கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு தரப்பினரும் அரசிடம் மனுக்கள் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தாயின் தங்கச் சங்கிலியை...

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் (09) அதிகாலை மாங்காட்டில் வைத்து கைதுசெய்ததுடன், கொள்ளையடிக்கப்பட்ட தங்கச் சங்கிலியையும் மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நேற்றைய தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ரி.தியாகேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

# மலையக தியாகிகள் தினம் அனுஷ்டிப்பு





(க.கிஷாந்தன்)

மலையக உரிமைக்குரல் மற்றும் பிடிதளராதே ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த மலையக தியாகிகள் தினம் நேற்று (10) பெருந்தோட்டப் பகுதிகளில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன் பிரதான நினைவேந்தல் நிகழ்வு கொட்டகலை, கொமர்ஷல் லேக் பகுதியில் நடைபெற்றது.

மலையக மக்களுக்கான தொழில்சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து தியாகிகளையும் நினைவுகூர்ந்து மாலை 3 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர் நிகழ்வின் ஏனைய அம்சங்கள் ஆரம்பமாகின.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்து, மலையக தியாகிகள் வரலாற்றை ஆரம்பித்து வைத்த முல்லோயா கோவிந்தன் உயிர் துறந்த ஜனவரி 10ஆம் திகதியை, மலையக தியாகிகள் தினமாக அனுஷ்டிப்பதற்கு கடந்த 2019 டிசம்பர் 15ஆம் திகதி தலவாக்கலை, டெவோனில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன்படியே ஜனவரி 10ஆம் திகதி மலையக தியாகிகள் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. கடந்த 2020 ஜனவரியில் மஸ்கெலியாவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. 2021ஆம் ஆண்டு பத்தனை சந்தியில் நடைபெற்றது. இம்முறை கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மலையக உரிமைக்குரல் மற்றும் பிடிதளராதே ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்களும் மலையக புத்திஜீவிகளும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் தியாகிகளின் உறவினர்களும் அரசியல்வாதிகளும் தொழிற்சங்கவாதிகளும் கலந்துகொண்டனர்.

### திறைசேரிக்கு கடும் நிதி...

வரவு-செலவுத் திட்டத்தினூடாக அமைச்சுகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் 5 சதவீதத்தை குறைப்பதற்கான யோசனையொன்றை ஜனாதிபதி அமைச்சரவைக்கு முன்வைத்துள்ளதுடன், மேலும், இந்த மாதத்துக்கான சமுர்த்தி கொடுப்பனவு இரண்டு வாரங்களுக்கு கால தாமதமாகலாம் என்றும் அவர் அறிவித்துள்ளதாக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (10) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

2022ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் நெருக்கடிக்குள்ளானமையினால், வரிப்பணத்தினூடாக கிடைக்கக்கூடிய வருமானமானது வருட ஆரம்பத்திலேயே பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களில் அரசாங்கத்துக்கு கிடைக்க கூடிய வரி வருமானம் வீழ்ச்சியை சந்திக்கும். அவ்வாறு வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டாலும், அரசாங்கத்தின் அத்தியாவசிய செலவுகளை ஏற்றே ஆகவேண்டும்.

அரச பணியாளர்களுக்கான சம்பள கொடுப்பனவு, ஓய்வூதிய கொடுப்பனவு, அரச கடனுக்கான வட்டி, பிற நலன்சார்ந்த செலவுகள் போன்ற செலவுகளை முன்னெடுப்பதற்கு போதுமானளவு போதிய வருமான வாய்ப்பு திறைசேரிக்கு இல்லாமல் போயுள்ளது. ஒவ்வொரு மாதத்தின் இடையிலும் அரச பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்தும்போது சம்பளக் கணக்கு மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதிய கொடுப்பனவை மீள செலுத்துவதற்கே முக்கியத்துவம் வழங்கப்படும்.

அதன் பின்னர் அத்தியாவசிய நலன்சார்ந்த செலவுகளை செய்வதற்கு கூட போதுமாளவு வருமானம் இல்லாமையினாலும், இந்த வருடம் பூராகவும் இந்த வருமான பிரச்சினை நிலவும் என்பதாலும் சகல அமைச்சுகளுக்கும் வரவு-செலவுத்திட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் நூற்றுக்கு 5 சதவீதத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்துக்கான சம்பள கொடுப்பனவை முறையாக வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையின் காரணமாக, சமுர்த்தி நிவாரண கொடுப்பனவு வழங்கும் நடடிக்கைகள் 1-2 வாரங்களுக்கு காலதாமதமாகலாம் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான வருமானம், 1977ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சிசெய்த எந்த அரசாங்கத்துக்கும் இருக்கவில்லை. சமுர்த்தி கொடுப்பனவில் காலதாமதம் ஏற்பட்டாலும் சம்பள கொடுப்பனவு, ஓய்வூதியம், சமுர்த்தி கொடுப்பனவு என்பவற்றை பெற்றுக்கொடுக்க கட்டாயம் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

### தேர்தல் நிதிப்பொறுப்பை...

எனவே, அரசாங்கமும் நாடாளுமன்றமும் தேர்தலை நடத்தும் நிதிக்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழு என்பது தனி நிறுவனமாகும். தேர்தல் ஆணைக்குழு என்ற வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு இதுவரையில், முன்னெடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் நிறைவு செய்திருக்கிறோம்.

எனவே, தேர்தலை நடத்துவது குறித்து ஆணைக்குழுவுக்குள் எந்த கருத்துவேறுபாடும் இல்லை. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் வேட்பாளர்களுக்கு கட்டுப்பணத்தை மீள செலுத்தவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தும்போது அந்தப் பணத்தை அவர்கள் எங்களின் தனிக் கணக்குகளில் வைப்பிலிடுவதில்லை. இந்த நிதி அரச கணக்கிலேயே வைப்பிலிடப்படும். தேர்தல் நிறைவடைந்ததும் ஒரு தொகை நிதி அரச சொத்தாக எடுக்கப்படுவதுடன், மிகுதி தொகை (வெற்றி பெற்றவர்களின் கட்டுப்பணம்) அவர்களுக்கு மீளவும் பெற்றுக்கொடுக்கப்படும்.

தேர்தல் ஆணைக்குழு என்பது வருமானம் ஈட்டும் நிறுவனமல்ல. நாங்கள் உழைத்து எங்களின் நிதியில் தேர்தலை நடத்தவில்லை. அரசியலமைப்பின் பிரகாரம் மக்களின் இறையாண்மையை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதே ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் நிதியை நாடாளுமன்றமே முகாமைத்துவம் செய்கிறது. எனவே, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தேர்தலுக்கான நிதியை வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கவேண்டும். தேர்தலுக்கான நிதி தொடர்பில் எங்களுக்கு பிரச்சினையில்லை என்று குறிப்பிட்டார்.

### பிரசார நடவடிக்கைக்கு...

பயன்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப் பட்டால், அவ்வாறான அரசியல்வாதிகளுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டின் (பெவ்ரல்) நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித் தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஆயத்த நடவடிக்கைகள் குறித்து நேற்று ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகளை சகல அரசியல் கட்சிகளும் ஆரம்பித்துள்ளன. எனவே, கட்சிகள் தேர்தலுக்கு தயாராகி வருகின்றன என்பது எங்களுக்கு தெளிவாக தெரிகின்றது. அதே போன்று எந்தவொரு இடையூறுமின்றி மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் தேர்தலை நடத்த முடியுமென்று நாங்கள் நம்புகிறோம்.

இருந்தபோதும், தேர்தலை காலந்தாழ்த்த அரசாங்கம் முயற்சிக்கின்றதோ என்ற சிறிய சந்தேகம் இருக்கிறது. மேலும், தற்போது நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய தேர்தல் ஆணைக்குழு செயற்பட்டு வருகிறதே தவிர, அந்த ஆணைக்குழுவால் புதிய சட்டதிட்டங்களை உருவாக்க முடியாது. அந்த ஆணைக்குழு சுயாதீனமாகவே செயற்பட்டு வருகிறது. இதுவரையில் அதன் செயற்பாடுகளுக்கு எந்த அரசாங்கமும் இடையூறு விளைவித்ததில்லை. இருந்தபோதும், இடைக்கிடை ஜனாதிபதி இதுதொடர்பில் கருத்து வெளியிட்டு வருவதால் தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மையை பாதித்துள்ளது.

தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்துதல் மற்றும் வேட்புமனு தாக்கல் செயற்பாடுகளின் போது சட்டவிரோத செயற்பாடுகள் ஏதும் இடம்பெற்றிருக்குமாக இருந்தால் ஆணைக்குழு உறுப்பினர்கள் கட்டுப்பணத்தை வேட்பாளர்களுக்கு திருப்பிச் செலுத்தவேண்டும் போன்ற தகவல்கள் வெளியாவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இதனை பாரதூரமான கருத்தாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மைக்கும் தீர்மானங்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் செயற்பாடாகவுமே கருதுகிறோம். சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழு தேர்தலை அறிவித்துள்ளதுடன், அரசியல்வாதிகள் எவ்வாறான கருத்துகளை முன்வைத்திருந்தாலும் தேர்தலை நடத்தவேண்டியது ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பாட்டில் இருக்கும்போதே இந்த தேர்தலுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. அதன் காரணமாக, ஒருசில உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வாகனங்களை பயன்படுத்துவதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. மார்ச் மாதம் 09ஆம் திகதிவரை தற்போது உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படும் என்பதால், தேர்தல் நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்ற சொத்துகளை பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழுவிடம் கோரியுள்ளோம்.

குறிப்பாக, வாகனங்கள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், நலன்புரித் திட்டங்கள் போன்றவற்றினூடாக தற்போது சபைகளில் இருப்பவர்கள் நிலைமையை அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனால், தேர்தலில் இருக்கும் சமத்துவத்துக்கு பாதிப்பு ஏற்படலாம்.

அதேபோன்று, உள்ளூராட்சி மன்றங்களில் தற்போதுள்ள பிரதானிகள் சொத்துகளை முறைகேடாக பயன்படுத்தியமை உறுதிப்படுத்தப் பட்டால், அவ்வாறான அசியல்வாதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்வாங்கமாட்டோம் என்றார்.

### கூட்டமைப்பில் பிரிவு...

ஹென்றி மகேந்திரன், எம்.ஏ.சுமந்திரன், ஆர்.இராகவன் ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தின் தொடக்கத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி தரப்பில் கருத்து தெரிவித்த போது, மத்திய குழுவில் எடுக்கப்பட்ட முடிவு இருந்தாலும், தாம் தனித்து போட்டியிடும் எண்ணத்தில் இல்லையென்றும், என்ன செய்யலாமென்றும் வினவப்பட்டுள்ளது.

ரெலோ, புளொட் ஆகியன இணைந்து போட்டியிட வேண்டுமென அப்போது வலியுறுத்தின.

எப்படி போட்டியிடுவது என பேசப்பட்ட போது, கடந்த தேர்தலை எதிர்கொண்டதை போல் எதிர்கொள்ளலாம் என ரெலோ கூறியது. எனினும், கடந்த முறை தமக்கு உறுதியளிக்கப்பட்ட சபைகள் வழங்கப்படாததால் அது பற்றி மீள பேசப்பட வேண்டுமென புளொட் தெரிவித்தது.

எனினும், தேர்தல் நெருங்கி விட்டதால், அதைப் பற்றி பேச அவகாசமில்லையென தமிழரசுக் கட்சி தெரிவித்தது.

இணக்கமாக செயற்படத் தயாரெனில், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 3 சபைகளை, 3 கட்சிகளும் ஆளுக்கொன்று வீதம் பகிரலாம் என பங்காளிகள் யோசனை தெரிவித்தனர். எனினும், தமிழரசுக் கட்சி தரப்பு அதில் தயங்கியது. தாங்களே அங்கு செல்ல சிறிதரன் விடுவதில்லை, அதை பற்றி தம்மால் பேச முடியாதென்றார்கள்.

இறுதியில், தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடப் போவதாக தெரிவித்தது. இதையடுத்து, 3 கட்சிகளும் தனித்து போட்டியிட முடிவெடுத்துள்ளதாக இரா.சம்பந்தனிடம், சுமந்திரன் தெரிவித்தார்.

#### சுமந்திரன் விளக்கம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள மூன்று பங்காளிக் கட்சிகளும் தனித்துப் போட்டியிடுவது எனக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல், அரசுடனான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சு உட்பட சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் இதில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதற்கும், ஏனைய பங்காளிகள் (ரெலோ, புளொட்) தனிவழி செல்வதற்கும் இணக்கம் எட்டப்பட்டது என்றும் சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

"சிலவேளை புளொட், ரெலோ என்பன இணைந்து போட்டியிடக்கூடும் அல்லது தனித்தனியே போட்டியிடக்கூடும். அது தொடர்பில் அந்த இரு கட்சியினரும் தீர்மானம் எடுப்பார்கள்.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எவரும் போட்டியிடுவதில்லை. ஆனால், தேர்தல் முடிவடைந்த பின்னர் மூன்று பங்காளிக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு சபைகளில் ஆட்சி அமைப்போம்" - என்று சுமந்திரன் எம்.பி. மேலும் கூறினார்.

# மாகாண அதிகாரங்களை முழுமையாக அமுல்படுத்த அரசுக்கு 7 நாள் அவகாசம்!

## தவறின், தமிழர் தரப்பு பேச்சிலிருந்து வெளியேற தமிழ்க் கட்சிகள் அதிரடித் தீர்மானம்!

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட மாகாண அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கத்திற்கு ஒரு வார கால அவகாசம் வழங்குவதென்றும், அந்தக் கால அவகாசத்திற்குள் அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படா விட்டால், அரசாங்கத்துடனான பேச்சை தொடர்வதில்லையென்றும் தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இரா.சம்பந்தனின் வீட்டில் நேற்று முன்தினம் (9) மாலை கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்த முடிவை எடுத்தனர்.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், ஹென்றி மகேந்திரன், ஆர்.இராகவன் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கும், தமிழர் தரப்பிற்குமிடையிலான பேச்சின்போது முன்வைக்கப்பட வேண்டிய விடயங்களை ஆராய தமிழ்த் தேசியக் கட்சிகள் சந்திப்பில் ஈடுபட்டன. இதன்போது, அரசியலமைப்பின்படி மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், பிடுங்கப்பட்ட அதிகாரங்களை மீளளிக்கவும் அரசாங்கத்திற்கு குறுகிய கால அவகாசம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 17ஆம் திகதிக்குள்- ஒரு வாரத்திற்குள்- மாகாண அதிகாரங்கள், ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தின் மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ முழுமையாக மீளளிக்கப்பட வேண்டும்.

ஏற்கெனவே வழங்கப்பட்ட அதிகாரங்களை ஒரு வாரத்திற்குள் மீளளிக்கவில்லையென்றால், இந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்கி தீர்வை தருமென்பது பகல் கனவாகவே அமையும் என்ற அடிப்படையில், அரசாங்கத்துடனான பேச்சை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையர்களுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்பு வழங்க இணக்கம்

## அந்நாட்டுத் தூதுவர் தகவல்



இலங்கையின் திறமையான பணியாளர்களுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் இணங்கியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுடன் விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்று (10) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே தூதுவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் திறமையான பணியாளர்களை உருவாக்கும் வகையில், பயிற்சி நிறுவனத்தை நிறுவி, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க ஜப்பான் அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தப் பயிற்சி மையம், ஜப்பானில் உள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் அந்த வேலைகளுக்கு விண்ணப்பிக்கும்போது சந்திக்க வேண்டிய அறிவுத் திறன்கள் மற்றும் மொழித் திறன்கள் பற்றிய புரிதலை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் பாரிய நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிப்பதற்கு தேவையான ஆதரவை வழங்குமாறு ஜப்பானிய பிரதிநிதிகளிடம் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேவையான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்காலத்தில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் ஜப்பானியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜப்பானில் கிரிக்கெட் வளர்ச்சிக்கு இலங்கையில் பயிற்சியாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களை வழங்க முடியும் என விளையாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. மகேசன், நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் சந்தன ஜயலால், தேசிய விளையாட்டு சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்க மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலையென முடிவில்லை

## தெளிவுபடுத்திய பொலிஸார்

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணையில் இது தற்கொலையா அல்லது கொலையா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் மரணத்திற்கான காரணத்தை கண்டறிய விசாரணை இன்னும் நடந்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஷாப்டரின் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதுவரை 175க்கும் மேற்பட்ட வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஷாஃப்டரின் மரணம் தற்கொலை என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாக சில செய்தியாளர்களுக்கு பதிலளித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், ஷாப்டர் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் இன்னும் முடிவு செய்யவில்லை என்றார்.

மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், கிட்டத்தட்ட 175 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் இரத்த மாதிரிகள் மற்றும் பிற உடல் பாகங்களை டி.என்.ஏ. பரிசோதனை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் அரசாங்க பகுப்பாய்வாளருக்கு உத்தரவிட்டார்.

குறைந்தபட்சம் 14 மாதிரிகள் பரிசோதனைக்காக அரசாங்க ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பேச்சாளர் கூறினார்.

மேலும், தொலைபேசி பகுப்பாய்வு, வங்கி அறிக்கை மற்றும் பல்வேறு ஆவணங்கள் பெறப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நேரடி ஆதாரங்களைக் கண்டறிய விசாரணை நடத்தப்படுகிறது என்றார். எனினும், இது தற்கொலையா அல்லது கொலையா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. இதுவரை சந்தேகத்தின் பேரில் எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

52 வயதான வர்த்தகர் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் சாரதி ஆசனத்தில் மற்றும் கழுத்தில் கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் பலத்த காயங்களுடன் காணப்பட்டார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

# ஏ.ரி.எம். இயந்திர பணம் திருட்டுச் சம்பவத்தில்

## பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட்டோருக்கு மறியல்

வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் திருடப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மீகஹதென்ன பொலிஸ் நிலைய நிர்வாகப் பகுதி பொறுப்பதிகாரி உட்பட ஏனையோரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திலுள்ள வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மீகஹதென்ன பொலிஸ் பரிசோதகர், பல்கேரிய பிரஜைகள் இருவர், கனேடிய பிரஜை மற்றும் இலங்கையர் ஒருவர் ஆகியோரையே விளக்கமறியலில் வைக்குமாறு பத்தேகம நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஹிக்கடுவ, பத்தேகம, காலி, கராப்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள அரச வங்கிகள் பலவற்றின் கணினியை ஊடுருவி பெருந்தொகையான பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில், முதல்கட்டமாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விரிவான விசாரணைகளையடுத்தே மீகஹதென்ன பொலிஸ் நிலைய நிர்வாகப் பகுதி பொறுப்பதிகாரி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

# இந்திய அரசின் கலாசார நிலையத்தை ஜனாதிபதி ரணில் யாழில் திறப்பார்

## மேலதிக செயலாளர் தகவல்

யாழ்ப்பாணத்தில் இந்திய அரசினால் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளதோடு, கலாசார மத்திய நிலையத்தின் செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைக்கவுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார்.





பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்போடு இலங்கையின் 25ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அது தொடர்பான முன்னேற்பாட்டுக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது.

அதில் முப்படைகளின் பிரதிநிதிகள், துறைசார் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி செயலக உத்தியோத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், இந்திய நிதியுதவியில் யாழில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ள தகவலை தெரிவித்தார்.

# தினசரி பலாபலன்கள்

**11-01-2023 சுபகிருது வருடம் மார்கழி மாதம் 27ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** புத்திரர்களால் வீண் பிரச்சினைகள் உருவாகலாம். தேவையற்ற செலவுகள் மனநிம்மதியைக் கெடுக்கும்.

**ரிஷபம்:** வீடு, வாகனங்களால் வீண் செலவினங்கள், தொல்லைகள் ஏற்படலாம். தாய்க்குப் பீடை.

**மிதுனம்:** மனத்துணிவுடன் எதையும் சாதிப்பீர்கள். நண்பரிடமிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கடகம்:** வீண் பேச்சை தவிர்த்துக் கொள்ளுங்கள். கட்டாயச் செலவினங்களால் தொல்லைகள் உண்டு.

**சிம்மம்:** உடல் நோய்கள் குணமடையும் நாள். எந்தச் சவால்களையும் முறியடிப்பீர்கள்.

**கன்னி:** வெளியிடத்தில் அல்லது குடும்பத்தில் அவமானமும் வீண் அலைச்சல்களால் உடல் அசதியும் ஏற்படும்.

**துலாம்:** கடந்த நாட்களில் உங்கள் கைநழுவிப் போனவை மீண்டும் கிடைக்கும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள்.

**விருச்சகம்:** புகழ்,கீர்த்தி, செல்வாக்கு உயரும். செய் தொழிலில் திட்டமிட்ட இலாபங்களை அடைவீர்கள்.

**தனுசு:** தடைப்பட்டிருந்த உங்கள் வெளிநாட்டுப் பயணம் சிறப்பாக அமையும். பூர்வீக சொத்துகளால் சங்கடங்கள் தோன்றும்.

**மகரம்:** கடுமையான அலைச்சலுடன், காரியக்கேடு ஏற்படும். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** நீண்ட நாள் காதலியை சந்திப்பீர்கள். பங்கு வியாபாரத்தில் எண்ணிய இலாபத்தை அடைவீர்கள்.

**மீனம்:** நோயிலிருந்து விடுதலை கிடைக்கும். நீண்ட நாள் சத்துருக்கள் உங்களிடம் பணிவாக நடந்து கொள்வர்.

திதி : சதுர்த்தி பி.ப. 2.31 வரை பின் பஞ்சமி

நட்சத்திரம்: மகம் மு.ப. 11.50 வரை பின் பூரம்

யோகம் : சித்தாமிர்த யோகம் (சுப காரியம் நன்மை)

வார சூலை: தென்மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.

நல்ல நேரம்: மு.ப. 9.31 - 10.31 மணிவரை

ராகு காலம் : 12.31 - 2.01 மணிவரை

எமகண்டம் : 8.01 - 9.31 மணிவரை

குளிகை : 11.01 - 12.31 மணிவரை

சந்திராஷ்டமம் : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739





சேர்.பொன்னம்பலம் அருணாசலத்தின் 99ஆவது நினைவு தினம் ஜனாதிபதி செயலக வளாகத்தில் (பழைய நாடாளுமன்றம்) நேற்று நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான ஆலோசகர் ருவான் விஜயவர்தன, அருணாசலத்தின் சிலைக்கு மாலை அணிவித்தார். சேர். பொன்னம்பலத்தின் குடும்ப உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உட்பட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.








கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இளைஞர் - யுவதிகளுக்கு வன்முறைப் பேச்சுகளைத் தவிர்ந்து கொள்வது தொடர்பான செயலமர்வு ஒன்றை ஒழுங்குசெய்திருந்தது. பேராதனை பெந்தொட்ட வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் ரேணுகா மல்லியகொட உட்பட பலர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். குழுத்தொழிற்பாடு ஒன்றின் பின்னர் அதனைப் பற்றி விளக்கமளிப்பதையும் கலந்துகொண்டவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (கண்டி நிருபர்)


## வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.

eba jb . ஸ்ரீமத் சுவாமிஜி—0710192687
h t hh

தமிழன் THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜனவரி 11ஆம் திகதி, புதன்கிழமை


# வலுப்படவேண்டும் 13

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய முயற்சிக்கு ஒத்துழைக்க இணங்கியுள்ள தமிழர் தரப்புகள், அது தொடர்பில் சில முன்னறிவித்தல்களையும் கொடுத்திருக்கின்றன.

ஒருபுறம் தேசிய இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வை எட்டும் முயற்சியை முன்னெடுக்கும் அதே சமயம், உடனடிப் பிரச்சினைகள் சிலவற்றையும் விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தமிழர் தரப்பு சுட்டிக்காட்டிய விடயங்களுக்குள் அடங்குகிறது.

அதற்குள் பிரதானமானது 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள முழு அதிகாரங்களையும் மீளளித்து, அந்தச் சபைகளை கட்டுறுதி உள்ளவையாக இயக்க வேண்டும் என்பதாகும்.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரப்பகிர்வு பௌத்த - சிங்கள தரப்புகளினால் சின்னாபின்னமாக்கப்பட்டுக் கிடக்கின்றது. அதை மீளச் சீரமைத்துக் கொடுக்கவேண்டும் என்பதும் இலங்கைத் தமிழர் தரப்பின் பிரதான கோரிக்கைகளில் ஒன்று.

13ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின் முழு நடைமுறையாக்கமே தமிழர் தரப்பில் இப்போது இங்கே வலியுறுத்தப்படுகின்றது என்று பார்த்தால், அதே சமய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமிழகத்தில் இயங்கும் இலங்கைத் தமிழர் பக்கத்துக்கு ஆதரவும் பரிவும் தந்து செயற்படும் தரப்புகளும் அதே விடயத்தை வலியுறுத்தப் புறப்பட்டிருக்கின்றன.

சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் ஏனையோரோடு சேர்ந்து நடத்திய ஆய்வு மாநாடு அதனையே கோடி காட்டுகின்றது.

13ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்துக்கு தமிழக அரசு மற்றும் இந்திய மத்திய (ஒன்றிய) அரசுக்கு தமிழகத் தலைவர்கள் ஒன்றிணைந்து அழுத்தம் கொடுக்கும் நோக்கத்துடன் இந்த மாநாடு நடத்தப்பட்டிருக்கின்றது. இலங்கையின் இப்போதைய தீர்வு முயற்சி நடவடிக்கைகள் முன்னே நகராமல் இடையில் துவண்டு போனாலும், 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக மீளளிக்கக் கோரும் வற்புறுத்தல் இலங்கையையும் தாண்டி, இந்தியாவின் உள்வீட்டு விவகாரமாக மாறி, தொடர்ந்து கொழும்புக்கு அழுத்தம் தரும் என்று நம்பலாம்.

திருமாவளவன் தலைமையிலான மனித உரிமைகள் அடிப்படையிலான சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு சென்னையில் ஆரம்பித்திருக்கும் செயற்றிட்டம் இந்த நம்பிக்கையை தந்திருக்கின்றது.

இதேவேளை அரசியலமைப்பில் காணப்படுகின்ற தெளிவற்ற வார்த்தைப் பிரயோகங்களால் உருவாகின்ற தடைகள் நீக்கப்படாவிட்டால், 13ஆவது திருத்தச் சட்டத்தை திறம்பட அமுல்படுத்துவது சாத்தியமில்லை என்பதே கடந்த 30 வருடங்களுக்கும் மேலான மாகாணசபை முறைமையின் அனுபவமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், மூன்று கட்டங்களாக 13ஆவது திருத்தச் சட்டத்தை பூரணமாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவில் அங்கம் வகிப்பதுடன், குறித்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்ற கலந்துரையாடல்களிலும் தொடர்ச்சியாக கலந்துகொண்டு வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள எழுத்துமூல ஆவணத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது, ஜனாதிபதிக்கு இருக்கின்ற நிறைவேற்று அதிகாரத்தின் மூலமாகவும் நிர்வாக ஏற்பாடுகளினூடாகவும் மத்திய அரசாங்கத்திற்கு எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் மாகாண அரசாங்கங்களிடம் கையளிப்பது முதலாவது கட்டம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, 13ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட சட்டங்களுள், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இடையூறாக இருக்கின்ற அல்லது முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையிலான சட்டங்களை ஆராய்ந்து, அவை 13ஆவது திருத்தச் சட்டத்துடன் பொருந்தும் வகையில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளுதல் இரண்டாவது கட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டமாக, 13ஆவது திருத்தத்தின் சில விதிகளிலுள்ள தெளிவின்மையை நீக்குவதற்கும், தெளிவான முறையில் அதிகாரங்களை வரையறை செய்வதற்கும் ஒதுக்கீடு செய்வதற்கும், அத்தோடு சட்டமியற்றுதல், நிர்வாக, நீதித்துறை மற்றும் நிதி அதிகாரங்களை அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்கள் மூலம் பயன்படுத்துவதற்கான வரையறைகளை உருவாக்குவதற்கு தேவையான அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தின் ஊடாக பிரச்சினைகளைத் தீர்க்க, அந்த திருத்தத்தை வலுப்படுத்தி முன்னோக்கிச் செல்வதே அரசாங்கத்தின் முன்னுள்ள தெரிவு. அதன்படி நடக்குமா அரசு?

# காலம் கடந்துவிடுவதற்கு முன்னதாக முதிர்ச்சியுடைய அரசியல் தலைவராக ஜனாதிபதி செயற்படவேண்டும்!

நீர்ச்சறுக்கல் விளையாட்டில் ஈடுபடுபவர்கள் கடல் அலைகளைக் கையாளும் ஆற்றல் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அலை எந்தளவுக்குப் பெரியதாக இருக்கிறதோ அந்தளவுக்கு அவர்கள் உயரத்துக்கு செல்வார்கள். அலையில் இருந்து தப்பிக்க முயற்சிப்பவர்கள் அதன் கீழே மூழ்கிவிடுவார்கள். எதிரணி அரசியல் கட்சிகளினால் உருவாக்கப்படுகின்ற உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான கோரிக்கை அலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாளுவார் என்றே தோன்றியது. சட்டப்படி இந்த தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதமளவில் நடத்தப்படவேண்டியவையாக இருக்கின்றன.

இந்த தேர்தல்கள் ஆளும் கட்சி மீது வாக்காளர்கள் வைத்திருக்கும் குறைந்த மதிப்பை வெளிக்காட்டக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அவ்வாறு நடந்தால் ஜனாதிபதியின் கரங்கள் வலுப்படும். நாட்டைக் மீளக்கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆதரிப்பதற்கு அவர்களை அவர் நிர்ப்பந்திக்க முடியும். உள்ளூராட்சித் தேர்தல்களில் தனது கட்சிக்கு ஆதரவாகக் கூட பிரசாரத்தில் ஈடுபடாமல் ஒதுங்கியிருக்கப்போவதாக ஜனாதிபதி முன்கூட்டியே அறிவித்துவிட்டார். தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கே தனக்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்று அதற்கு அவர் காரணம் கூறுகிறார்.

பொருளாதார மீட்சி மீது கவனத்தைக் குவிப்பதில் ஜனாதிபதி காட்டும் அக்கறைக்கு அந்த பணியின் அவசரமும் அவசியமுமே காரணம். பொருளாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துகொண்டே போகிறது. கடந்த வருடம் 8 சதவீதத்தினால் சுருங்கிய பொருளாதாரம் புதிய வருடத்தில் சாதகமான வளர்ச்சிக்கு திரும்புவதற்கு வாய்ப்புகள் குறைவு. ஏற்றுமதி பொருளாதாரத்தின் செயற்பாட்டிலான மேம்பாடு மற்றும் வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்கள் அனுப்புகின்ற பணம் காரணமாக வெளிநாட்டு நாணய வருகையில் படிப்படியான அதிகரிப்புகள் மாத்திரமே இதுவரையில் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், பெரியளவிலான வெளிநாட்டு நாணய வருகைக்கு உட்கட்டமைப்புகளில் முதலீடும் நீண்டகால அடிப்படையிலான உற்பத்தி ஆற்றலும் அவசியம். அது இனிமேல்தான் நடைபெற வேண்டியிருக்கிறது. வல்லமை பொருந்திய ஹெட்ஜ் நிதியாளர்களும் ஏனைய முதலீட்டாளர்களும் கடன் நிவாரணப் பேச்சுவார்த்தைகளில் கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் காரணத்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவியைப் பெறுவதற்கான செயன்முறைகள் தடைப்பட்டுப் போயிருப்பதாக கூறப்படுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் பட்சத்தில் பிரசார நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியிருப்பதற்கு ஜனாதிபதி எடுத்த முடிவு வெற்றிபெறுவதில் தனது அரசியல் கட்சிக்கு இருக்கக்கூடிய குறைவான வாய்ப்புகள் பற்றிய அவரின் மதிப்பீட்டை பிரதிபலிப்பதாகவும் இருக்கக்கூடும். இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் ஆசனத்தைக் கூட வென்றெடுக்கவில்லை. உள்ளூராட்சித் தேர்தல்களில் அந்தக் கட்சி சிறப்பாக செயற்பாட்டை வெளிக்காட்டுவதற்கான சாத்தியம் இல்லை. மக்கள் போராட்ட குழப்ப காலப்பகுதிக்குப் பிறகு உறுதிப்பாட்டை ஏற்படுத்தியதற்காக சனத்தொகையில் வசதி படைத்த பிரிவினரே ஜனாதிபதியின் தலைமைத்துவத்தைப் பாராட்டுகிறார்கள்.

ஆனால், மீள்விக்கப்பட்ட இந்த உறுதிப்பாடு ஐக்கிய தேசியக் கட்சிக்கான வாக்குகளாக மாறுவதற்கான சாத்தியத்துக்கு மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார இடர்பாடுகள் இடமளிக்கப்போவதில்லை.

### முன்னேற்றம் இல்லை

பழைய வருடத்தின் முடிவில் உறுதியளிக்கப்பட்ட சாதகமான நகர்வை புதுவருடம் இன்னும் கொண்டுவரவில்லை. இலங்கை அதன் 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும்போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது என்ற ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் உறுதிமொழி நடைமுறை உண்மையாவதற்கான அறிகுறிகளைக் காணவில்லை. வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பொறுத்தவரையிலும் கூட முன்னேற்றம் இல்லை என்பது குறித்து பிரதான தமிழ் அரசியல் அணியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டிருக்கிறது.

நிலப்பிரச்சினை ஓய்வின்றித் தொடருகிறது. தமிழர்களும் முஸ்லிம்களும் விவசாயம் செய்துகொண்டிருந்த அரச நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு கம்பனிகளுக்கு அல்லது சிங்கள மக்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்தப் பகுதிகளில் கண்டெடுக்கப்படும் பௌத்த தொல்லியல் பொருட்கள் முரண்பாடுகள் மூளும் இடங்களாக மாறுகின்றன. தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்த பகுதிகளுக்குள் சிங்களவர்கள் பிரவேசிக்கும்போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன.



போர்க் காயங்களும் புரையோட விடப்படுகின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மற்றும் காணாமல்போனோரின் கதி பற்றிய பிரச்சினைகள் தீர்கப்படாமல் தொடர்கின்றன. இந்த பிரச்சினைகள் தமிழர்களைப் பொறுத்தவரை அடையாள முக்கியத்துவமுடையவை. அவற்றைக் கையாளுவதாக உறுதியளித்துவிட்டு பிறகு அரசாங்கம் கைவிடுவது அதன் மீதான நம்பிக்கையை மேலும் அரித்துவிடும்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியின் உறுதிமொழிகளை ஒருவகை நம்பிக்கையுடன் நோக்கியது. அரசாங்கம் அந்த உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறும்போது கூட்டமைப்பும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை இழக்கும் நிலை ஏற்படும். இது அவர்கள் எதிர்நோக்குகின்ற ஒரு முக்கிய பிரச்சினையாகும். தங்களது மக்களின் நம்பிக்கையைப் பேணவேண்டிய அவசியம் கூட்டமைப்புக்கு இருக்கிறது. அதனால்தான் அவர்கள் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகுவது குறித்து சிந்திக்கவேண்டிவரும் என்று எச்சரிக்கை செய்தார்கள்.

உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சி புதுவருடத் தொடக்கத்தின் இன்னொரு கெடுதியான அறிகுறியாகும். அவுஸ்திரேலியா போன்ற சில நாடுகளில் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை பொதுத்தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. அமெரிக்கா போன்ற வேறு நாடுகளில் காங்கிரஸின் அரைவாசி ஆசனங்களுக்கு இரு வருடங்களுக்கு ஒரு தடவை பொதுத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. தீர்மானங்களை மேற்கொள்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களுடன் தாங்கள் இணங்கிக்கொள்கிறார்களா இல்லையா என்பதை வெளிக்காட்டவும் அதிருப்தி ஏற்பட்டால் புதிய பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கும் வாய்ப்பைக் கொடுப்பதற்காக இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

பொருளாதாரத் துன்பங்கள் காரணமாக மக்கள் பெரும் வேதனையும் விரக்தியும் அடைந்திருப்பதால் அவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக தேர்தல்கள் நடத்தப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடமுடியாது. உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டால் மக்கள் தங்களின் விரக்தியை வேறு மார்க்கங்களில் வெளிக்காட்டக் கூடும். அது நிச்சயமாக அமைதிவழி மார்க்கமாகத்தான் இருக்கும் என்று சொல்லமுடியாது.

### சவாலை ஏற்றுக்கொள்ளல்

ஜனாதிபதியின் முரண்பாடான அறிவிப்புகள் மற்றும் செயற்பாடுகள் மூலமாக தேர்தல்கள் தொடர்பில் அரசியல் சமுதாயத்திற்குள் நிலவும் முரண்பாடுகளையும் அவர் மீது பிரயோகிக்கப்படும் நெருக்குதல்களையும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. முன்னர் ஐந்து தடவைகள் பிரதமராக இருந்தபோது அவரின் தலைமைத்துவம் மென்மையான அணுகுமுறை கொண்டதாக இருந்தது. ஆனால், அதிகாரத்தில் இல்லாதபோது அவர் ஆதரித்த மக்கள் போராட்ட இயக்கத்தை ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் கொடுங்கரம் கொண்டு அடக்கியொடுக்கினார். போராட்ட இயக்கத்துக்கு தலைமத்துவத்தை வழங்கியவர்களை அரசாங்கம் தொடர்ந்து கைதுசெய்கின்ற விதம், எதிர்காலத்தில் அதே போன்ற போராட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடக்கூடியவர்களுக்கு ஒரு பயமுறுத்தல் செய்தியைச் சொல்கிறது.

போராட்டக்காரர்களை தண்டித்து முடங்கச் செய்வதற்கு சட்டம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், வன்முறையில் ஈடுபட்ட கும்பல்களையும் பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப்படுபவர்களையும் அரசாங்கம் வேறு விதமாகக் கையாளுகிறது. கொள்வனவு செயற்பாடுகளில் உயர்மட்டத்தில் கடுமையான ஊழல் தொடருவதற்கு அனுமதிக்கப்படுகிறது.இது மன்னிக்கமுடியாததாகும்.

மக்கள் மத்தியில் அவருக்கு இருந்த செல்வாக்கினாலோ அல்லது அவர்கள் வாக்களித்ததனாலோ ரணில் ஜனாதிபதியாக வரவில்லை. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது அரசாங்கம் முன்வைத்த சவாலை ஏற்றுக்கொள்ள முன்வந்த காரணத்தினாலேயே அவர் ஜனாதிபதியானார். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி போராட்ட இயக்கத்துக்கு முகங்கொடுக்கமுடியாமல் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து ஆளும் கட்சி விக்கிரமசிங்கவை அதன் சிறந்த தெரிவாக்கியது.

ஊழல் மோசடிகளினாலும் தவறான ஆட்சிமுறையினாலும் நாட்டின் பொருளாதாரத்தை நிலைகுலையச்செய்த ஆளும் கட்சியின் தோழமையுடன் அதிகாரத்தில் இருப்பதை விடவும் ஜனாதிபதிக்கு சவால் மிக்க முக்கியமான பணி இருக்கிறது. அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு அவர் கட்சி அரசியலுக்கும் தனது சொந்த நலன்களுக்கும் அப்பால் நின்று நாட்டின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு தனது ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை பயன்படுத்தவேண்டும்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் அளவில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணப்போவதாக ஜனாதிபதி உறுதிபூண்டபோது தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைவரம் குறித்து ஒரு மதிப்பீட்டை அவர் செய்திருந்தார் எனபதை விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருந்தது. நாட்டினதும் மக்களினதும் நல்வாழ்வுக்காக ஒரு தொலைநோக்கை அவர் வெளிப்படுத்தினார். அதற்காக அவரைப் பாராட்டவேண்டும். இப்போது அவர் மதிப்பீடுகளுக்கு அப்பால் சென்று தேசிய நலனை மனதிற்கொண்டு செயலில் இறங்கவேண்டும்.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே தனக்குரிய ஆணை என்ற அடிப்படையில் தனது கட்சிக்காக உள்ளூராட்சித் தேர்தல்களில் பிரசாரங்களில் ஈடுபடப்போவதில்லை என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு, அறிவுஜீவிகள் சமூகமும் சர்வதேச சமூகமும் அவரிடம் காண்கின்ற உயர்ந்த சிந்தனையின் இன்னொரு அறிகுறியாகும். இருள் சூழ்ந்த இன்றைய காலகட்டத்தில் நாட்டுக்கு தேவைப்படுவது அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவதற்காக அதுவரை காலத்தைக் கடத்துவது பற்றி சிந்திக்கின்ற ஒரு தலைமைத்துவம் அல்ல. தன்னிடம் இன்று இருக்கின்ற அதிகாரத்தை நேற்றைய, இன்றைய, நாளைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பயன்படுத்தக்கூடிய தலைமைத்துவமேயாகும்.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## இன்றைய நாளில்...

* 1571 – ஆஸ்திரியாவில் உயர்குடியினருக்கு சமயச் சுதந்திரம் வழங்கப்பட்டது.
* 1787 – யுரேனஸ் கிரகத்தின் டைட்டானியா, ஒபரோன் ஆகிய இரண்டு நிலவுகளை வில்லியம் எர்செல் கண்டுபிடித்தார்.
* 1911 – கொம்ரேட் என்ற பத்திரிகையை விடுதலைப் போராட்ட வீரர் மௌலானா முகம்மது அலி கொல்கத்தாவில் வெளியிட ஆரம்பித்தார்.
* 1922 – நீரிழிவுக்கு மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.
* 1966 – இந்திய-பாகிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டு வந்த தாஷ்கந்த் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி தாஷ்கந்த் நகரில் மாரடைப்பால் காலமானார்.
* 2007 – செயற்கைக்கோள் தகர்ப்பு ஏவுகணைச் சோதனையை சீனா நடத்தியது.

## நக்கல் நமசிவாயம்

கஞ்சாவோட பிடிபட்ட மொனராகலை பொலிஸ் எஸ்.எஸ்.பி. கடும் டயானா எம்.பி. ஆதரவாளரா இருப்பார் போல..!



# ஊடகங்கள் அறிக்கையிடும் வகையில் புகையிரதப் பயணங்கள் இரத்துச்செய்யப்படவில்லையென அமைச்சர் பந்துல அறிவிப்பு

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தெரிவிப்பு

★ ரயில் பயணங்கள் இரத்துச்செய்யப்படுவதை நிறுத்த இம்மாத இறுதிக்குள் நிகழ்ச்சித் திட்டம்
★ புதிய ரயில் நேர அட்டவணை பெப்ரவரி ஆரம்பத்தில்
★ நீண்டதூர ரயில் சேவைக்கான டிக்கட்டுகளை 100 வீதம் ஒன்லைன் முறையில் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது



ஊடகங்கள் அறிக்கையிட்டது போன்று பணியாளர்கள் ஓய்வுபெற்றமை காரணமாக ரயில் பயணங்கள் இரத்துச்செய்யப்படாது - என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் (05) அவருடைய தலைமையில் நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் ஓய்வு பெறுவதால் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான புகையிரதப் பயணங்கள் இரத்துச் செய்யப் பட்டாலும் அது ஊடகங்களில் வெளியாகும் அளவுக்கு அதிகமாக இல்லை யென வருகை தந்திருந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். சிறிய ரயில் பயணங்கள் இரத்துச்செய்யப்பட்டாலும் ஊடகங்களால் அது பெரிதுபடுத்திக் காட்டப்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் குறிப்பிடுகையில், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருவதால் எரிபொருள் விநியோகத்துக்காக அதிகளவான ரயில்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், இதனால் ரயில் போக்குவரத்தை குறிப்பிட்டளவு குறைக்க வேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். அத்துடன், ஊடகங்கள் அறிக்கையிடுவதைப் போன்று ரயில் போக்குவரத்து இரத்துச் செய்யப்படவில்லையென்றும் இது தொடர்பில் விளக்கமளிக்கவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பணியாளர்கள் ஓய்வுபெறுவதால் குறிப் பிட்ட எண்ணிக்கையிலான ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டால் அவற்றை இம்மாத இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்தும் அமைச்சர் அதிகாரிகளிடம் கேட்ட றிந்தார்.

அதற்குத் தேவையான நியமனங்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருப்பதால் இம்மாத இறுதிக்குள் இதனை முடிவுக்குக் கொண்டவர முடியும் என அதிகாரிகள் பதில் வழங்கினர். கடந்த ஆண்டு இறுதியில் 10 ரயில் சாரதிகள் மாத்திரமே ஓய்வு பெற்றிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பெப்ரவரி மாத தொடக்கத்தில் கிடைக்கக்கூடிய திறனுக்கேற்ப புதிய ரயில் நேர அட்டவணை தயாரிக்கப்படும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தவிர, "எல்ல-ஒடிஸி" போன்ற சுற்றுலா அம்சங்களுடன் கூடிய தொலைதூர ரயில் சேவைகளுக்கான ரிக்கட்டுகளை 100 வீதம் ஒன்லைனில் பதிவுசெய்து பெற்றுக்கொள்வது குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது.

மேலும், 203ஆம் அத்தியாயமான மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் 158ஆம் பிரிவின் (2)ஆம் மற்றும் (3)ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2022 ஜூலை 07ஆம் திகதி வெளியிடப்பட்ட 2287/28ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் இங்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதில் இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, சிறிபால கம்லத், சிவநேசதுரை சந்திரகாந்தன், அனுராத ஜயரத்ன, சாந்த பண்டார, டயனா கமகே, நாடாளுமன்ற உறுப்பி னர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, செல்வம் அடைக்கலநாதன், முஜிபுர் ரஹ்மான் சட்டத் தரணி மதுர விதானகே, சம்பத் அத்துகோரள, (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார முதிதா பிரிஷாந்தி த சொய்சா, சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, குணதிலக்க ராஜபக்ஷ, சுமித் உடுகும்புர மற்றும் மஞ்சுளா திஸாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.





# கைத்துப்பாக்கி, தோட்டாக்களுடன் உடுகம்பொலவில் இருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் 14 தோட்டாக் களுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உடுகம்பொல பகுதியிலுள்ள வீதித் தடைப்பகுதியில் மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவரை சோதனையிட்டபோதே வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் 14 தோட்டாக்களுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 36 மற்றும் 31 வயதுடையவர்கள் எனவும், இவர்களின் சகா என அறியப்படும் குளியாப் பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கைத்துப்பாக்கியை பயன்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபட திட்டமிட்டுள்ளார்களா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளுக்காக அவர்களை தடுப்புக்காவலில் வைக்க பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

1990 ஆம் ஆண்டின் 4-ம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9-ம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி) – விஜேராம கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

களுத்தறை வர்த்தகப் பதிவு இலக்கம் WSS 574 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு ஸ்தாபனமாக கீர்த்திநாமம் பெற்ற "ஆர் என்ட் எச் ஃபேஷன்ஸ்" என்ற ஸ்தாபனத்தை தனியுடமை வியாபாரமாக நடத்திக் கொண்டு இருக்கும் களுத்தறையில் வசிக்கும் சலனி பிரதீபா வல்பிட மற்றும் களுத்தறையில் வசிக்கும் சலனி பிரதீபா வல்பிட என்பவர் கடப்பாடுடையவராகவும் / ஈடுவைத்தவராகவும் என்ற வகையில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு தீபானி ரங்கே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018/08/03 ஆம் திகதியிடப்பட்ட 1810 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது செலான் வங்கி பீ.எல்.சி யில் அடகுவைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூலைனது.

**2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள வங்கியின் வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கோவிட் 19 நெறிமுறைகளை பின்பற்றுவதற்கான கட்டிப்பான வழிகாட்டலுக்கு ஏற்ப நடாத்தப்படும்

**அட்டவணை**

1.மேல் மாகாணம், களுத்தறை மாவட்டத்தில், ரைகம் கோரலே அதிகாரி பத்துவே, பண்டாரகம பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் மற்றும் பண்டாரகம பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் 656ஏ ரைகம் வடக்கு கிராம சேவகர் பிரிவிற்குள் ரைகம் கிராமத்திலுள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஆர்.பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000/03/12 மற்றும் 2000/06/04 ஆம் திகதியிடப்பட்ட 1408 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அமரிகேவத்த அல்லது மாரவத்த உள்ள என்று அழைக்கப்படும் காணி லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டின் அளவு பன்னிரெண்டு பேர்ச் (ஏ0.றூ0.பே12) விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர் செய்கைகள், மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் ஆகும்.

2.மேல் மாகாணம், களுத்தறை மாவட்டத்தில், ரைகம் கோரலே அதிகாரி பத்துவே, பண்டாரகம பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் மற்றும் பண்டாரகம பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் 656ஏ ரைகம் வடக்கு கிராம சேவகர் பிரிவிற்குள் ரைகம் கிராமத்திலுள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஆர்.பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000/03/12 ஆம் திகதியிடப்பட்ட 1408 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அமரிகேவத்த அல்லது மாரவத்த உள்ள என்று அழைக்கப்படும் காணி லொட் 2 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டின் அளவு பதினான்கு பேர்ச் (ஏ0.றூ0.பே14) விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர் செய்கைகள், மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் ஆகும்.

3.மேல் மாகாணம், களுத்தறை மாவட்டத்தில், ரைகம் கோரலே அதிகாரி பத்துவே, பண்டாரகம பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் மற்றும் பண்டாரகம பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் 656ஏ ரைகம் வடக்கு கிராம சேவகர் பிரிவிற்குள் ரைகம் கிராமத்திலுள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஆர்.பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000/03/12 ஆம் திகதியிடப்பட்ட 1408 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அமரிகேவத்த அல்லது மாரவத்த உள்ள என்று அழைக்கப்படும் காணி லொட் 3 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டின் அளவு பத்து பேர்ச் (ஏ0.றூ0.பே10) விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர் செய்கைகள், மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் ஆகும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணியானது மேல் மற்றும் நீளமாக பாதை உரிமை மற்றும் பிற உரிமைகளுடன்

1.மேற் குறிப்பிடப்பட்ட ரைகம் கிராமத்திலுள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஆர்.பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000/03/12 ஆம் திகதியிடப்பட்ட 1408 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அமரிகேவத்த அல்லது மாரவத்த உள்ள என்று அழைக்கப்படும் காணி லொட் 4 (எல்லைச் சுவரின் ஒரு பகுதியுடன் கூடிய நிலம்) என அடையாளமிடப்பட்ட காணித்துண்டின் அளவு நான்கு பேர்ச் (ஏ0.றூ0.பே4.0) விஸ்தீரணமான காணி

2.மேற் குறிப்பிடப்பட்ட ரைகம் கிராமத்திலுள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஆர்.பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000/03/12 ஆம் திகதியிடப்பட்ட 1408 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அமரிகேவத்த அல்லது மாரவத்த உள்ள என்று அழைக்கப்படும் காணி லொட் 5 (12 அடி அகலம் சாலைக்காக ஒதுக்கப்பட்டது) என அடையாளமிடப்பட்ட காணித்துண்டின் அளவு தசம் இரண்டு பேர்ச் (ஏ0.றூ0.பே0.2) விஸ்தீரணமான காணி

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** பண்டாரகம கடைவீதியில் இருந்து ஹொரண வீதி ஊடாக 2.5km வரை தொலைவிலுள்ள ரைகம் சந்தி வரை சென்று இன்னும் 200 மீற்றர் தூரம் அதே வீதியில் சென்று இடது பக்கத்தில் உள்ள 20 அடி அகலமான கார்பட் செய்யப்பட்ட உயன்வத்த வீதி வரை சென்று அதே வீதியில் 75 மீற்றர் தூரம் சென்ற பிறகு வலது பக்கத்தில் இந்த விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2022.11.18 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2022.12.01 ஆம் திகதி அத, டெய்லி மிரர் மற்றும் தமிழன் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கங்கள்: 011-2456463, 011-2456473.

*எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடாத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

சந்திமா பிரியதர்ஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி, சர்வோதய மாவத்த,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம்: 071 4318252 – 011-2173282





நுவரெலியா கல்வி வலயம், 2021இல் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. அந்தவகையில் 2020ஆம் வருடத்தை விட 2021ஆம் வருடம் ஆங்கில பெறுபேறுகளை 10 வீதம் முதல் அதிகரிக்கச் செய்த ஆங்கில ஆசிரியர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு கடந்த வருடம் வலய மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில மொழித் தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகள் நுவரெலியா கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாந்தகுமார் தலைமையிலும் அவரின் ஏற்பாட்டிலும் நுவரெலியா காமினி தேசிய பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் (9) நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாந்தகுமார், கோட்டக் கல்விப் பணிப்பாளர் சரத் சந்திர, வலய பிராந்திய ஆங்கில மொழி மூல இணைப்பாளர்களான கமலா வில்ஷன், தம்மிக்கா கோதா பத்திரன, தேசானி சேனாதீர ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினர்.
(தலவாக்கலை நிருபர்)









கொழும்பு 13 அல்-ஹமீட் அல்-ஹுஸைனியா கல்லூரியின் 138ஆவது வருடத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவும் சிறப்பு அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கலந்துகொண்டனர். மாணவ செல்வங்களுக்கு சான்றிதழ்களும் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.
(படப்பிடிப்பு: மொஹம்மட் நஸார் )

## 10.01.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 136 2105 | 147 5753 |
| கனேடியன் டொலர் | 156 428 | 168 44 7 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41,3071 | 44 4611 |
| யூரோ | 273 5258 | 3 2 16 |
| ஜப்பான் யென் | 1 6084 | 1 7208 |
| சிங்கப்பூர் டொலர் | 158 1 20 | 17 37 4 |
| ஸ்ரேலிங் பவுன் | 325 6204 | 342 42 7 |
| சுவிஸ் பிராங்க் | 276 6111 | 3 5 4 31 |
| ஐ.அ.டொலர் | 25 488 | 260 2878 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 85 ,6862 |
| குவைட் | குவைட் தினார் | 0,072 85 5 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 ,7351 |
| கட்டார் | கட்டார் றியால் | 88, 725 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3254 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87,5125 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.01.09
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4995
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 11,384,431.00
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 7 5 3 4 2 8

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3237
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 69,625,857.20
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 15 18 34 47

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1450
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 13,188,478.80
வெற்றி இலக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 6 1 2 5 1 9

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1025
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 141,392,322.00
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 09 30 41 69

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 304
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,540,109.80
வெற்றி இலக்கினம்: கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 31 42 58 61
விசேட இலக்கினம்: கும்பம்

**மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம்: 1343
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 292,060,630.00
ஆங்கில எழுத்து: R
சுப்பர் இலக்கம்: 24
வெற்றி இலக்கங்கள்: 30 40 48 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# மன்னாரில் வடமாகாண ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல்

(மன்னார் நகர் நிருபர்)



மன்னார் மாவட்டத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் நேற்று முன்தினம் (09) மதியம் மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, வடமாகாண பிரதம செயலாளர், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், பங்குத்தந்தையர்கள், மாகாண சபை திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

கலந்துரையாடலில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் முக்கியமாக காணிப் பிரச்சினை தொடர்பாகவும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ள காணிகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

இரண்டு மாவட்டங்களிலும் பிரதேச செயலாளர்களால் தங்களது பிரதேசங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களது பிரதேசத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய மற்றும் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

உணவு பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. உணவு உற்பத்தி சம்பந்தமாக பிரதேச செயலாளர்களூடாக உணவு உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது தொடர்பாகவும், உணவு உற்பத்தி போசாக்கு மட்டத்தை மக்களிடையே உயர்த்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

## வீட்டுத் தோட்டப் போட்டியில்

# வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் விவசாய ஆர்வத்தைத் தூண்டும் வகையில் புதிய வெளிச்சம் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் வடமராட்சி பிரதேசத்தில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசுத்தொகையும் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

வடமாகாண கல்வி அமைச்சு மற்றும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் ரி. கலைச்செல்வன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த இயற்கை விவசாய பயிற்றுநர்களான பாமாயன் மற்றும் சுந்தரராமன் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினர்.





இலங்கை இராணுவத்தினரின் 51ஆம் பிரிவினரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை உடற்கல்வி ஆசிரிய பயிலுநர்களும் இணைந்து நேற்று முன்தினம் (09) காலைமுதல் மாலைவரை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விளையாட்டு மைதானத்தை செப்பனிடும் பணியில் ஈடுபட்டனர். (யாழ். நிருபர்)

# மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை மந்திகை சந்திக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த இராசு புவனேஸ்வரன் (வயது- 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டிலிருந்து இரவு வேலைக்காக இரவு சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வேலைத்தளத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

அதன்போது, மந்திகை சந்திக்கு அண்மையில், மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.


அதில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு, சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொக்குவிலில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் நிறுத்தம்

(யாழ். நிருபர்)



யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப் பட்டிருப்பதாக சந்தேகிக்கப்பட்ட இடத்தில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் எதுவித ஆயுதங்களும் கிடைக்காத நிலையில் அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கொக்குவில், பொற்பதி வீதியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப் பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் நேற்று முன்தினம் (09) காலை அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற பதிவாளர் தலைமையில், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

இதன்போது பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் ஆகியோர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நான்கு இடங்களில் அகழ்வு மேற்கொள்ளப் பட்டபோதும் எதுவித ஆயுதங்களும் மீட்கப்பட வில்லை. அதனையடுத்து மாலை அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன.

அகழ்வுப் பணிகள் இடம்பெறும் இடத்திற்கு அருகிலேயே விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவின் முகாம் மற்றும் விடுதலைப் புலிகளின் சட்ட மருத்துவக் கல்லூரியும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தாண்டிக்குளம் வீதியில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் சடலம் மீட்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று (10) காலை 6.30 மணியளவில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தாண்டிக்குளத்திலிருந்து புதுக்குளம் செல்லும் பிரதான வீதியில் தாண்டிக்குளம் சந்தியிலிருந்து 500 மீற்றர் தொலைவிலுள்ள வளைவுக்கு அண்மித்த பகுதியில் மோட்டார்சைக்கிளுடன் சடலம் ஒன்று காணப்படுவதாக பொதுமகனொருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

குறித்த மரணத்திற்கு காரணம் விபத்தாக இருக்கலாம் என தெரிவிக்கப்படும் நிலையில், வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட் வசந்த சந்தன நாயக்க என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

# பொங்கல் தினத்தன்று நுவரெலியா-பதுளையில் மதுபான விற்பனை நிலையங்களை மூடுங்கள்



## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கோரிக்கை

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நுவரெலியா மாவட்டத்திலுள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுமாறு பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அ.அரவிந்தகுமார் மதுவரித் திணைக்கள ஆணையாளருக்கு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழர்களின் புனித தினமான தைப் பொங்கல் பண்டிகை அன்றைய தினம் கொண்டாடப் படுவதை முன்னிட்டே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்திலுள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களையும் பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை மற்றும் ரிதிமாலியந்த பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருக்கும் சகல மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுமாறு அவர் விடுத்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் புனித தினமான தைப் பொங்கலன்று பொதுமக்களை கோயில்களுக்கு சென்று இறைவழிபாடுகளில் அதிகம் ஈடுபடுத்துவதற்கான ஒரு முயற்சியாகவேதான் இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கம்பளையில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் மாரடைப்பால் மரணம்

(கண்டி நிருபர்)

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த ஒருவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்த சம்பவம் கம்பளைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை (7) இடம்பெற்றுள்ளது. நாவலப்பிட்டியைச் சேர்ந்த மீரா சாயிப் மொஹமட் சாலி (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தன்னுடைய மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் நாவலப்பிட்டியில் இருந்து வெலம்பொட என்ற இடத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. தனது கணவன் முறை தவறி மோட்டார் சைக்கிளை செலுத்தியதாகவும் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இருவர், அந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தியதாகவும் அப்போது அவர் தனக்கு நெஞ்சு வலிப்பதாகவும் மூச்சுவிடக் கடினமாக இருப்பதாகவும் கூறியதாக அவருடன் பயணித்த மனைவி தெரிவித்துள்ளார்.

உடனடியாக வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றில் அவர் ஏற்றப்பட்டு பொலிஸாரின் உதவியுடன் கம்பளை வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். எனினும், செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் இடம்பெற்ற அதே தினத்தன்றுதான் அவரது மகளுக்கு திருமண நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியேற்பு





(செ.திவாகரன்)

நுவரெலியா பொலிஸ் பிரிவின் புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக அனுருத்த பண்டார ஹக்மன பதவியேற்றார். அவரது பதவியேற்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (9) காலை நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் மும்மத தலைவர்களின் ஆசிகளுடன் இடம்பெற்றது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் எழுத்துபூர்வ அனுமதியுடன், அவசர கடமையின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்குட்பட்டு, 09ஆம் திகதியன்று சிரேஷ்ட பொலிஸ்துறை கண்காணிப்பாளர் அனுருத்த பண்டார ஹக்மான நுவரெலியா பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக அறிவிக்கப்பட்டார்.

இதற்கு முன்னர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்னவின் தனிப்பட்ட உதவியாளராக பல்லாண்டுகள் பணியாற்றிய இவர் பதவி உயர்வு பெற்றே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் நுவரெலியா பொலிஸ் பிரிவின் உதவி அத்தியட்சகர் சிறிவர்தன, பிரதி பொலிஸ்மா அதிபர்கள், நுவரெலியா தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ஹேமலால் ஹெட்டியாரச்சி உட்பட அனைத்து பொலிஸ் நிலையங்களின் நிலைய கட்டளை தளபதிகள் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# இரண்டு விபத்துகளில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் பலி

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரு வேறு இடங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் (9) உயிரிழந்துள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

அரநாயக்க - மாவனல்ல வீதியில் அலுபொத்த என்ற இடத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயத்துக்குள்ளான 22 வயது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, பலாங்கொடை - வெள்ளவாய வீதியில் மதுருகெட்டிய என்ற இடத்தில் டிராக்டர் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் அதில் பயணம் செய்த 55 வயது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த இரு விபத்துகள் குறித்தும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# 4351 கர்ப்பிணித் தாய்மார் இரத்தக் குறைவால் பாதிப்பு

## இரத்தினபுரி மாவட்ட எம்.பி. காமினி தெரிவிப்பு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தில் 4351 கர்ப்பிணித் தாய்மார் பாரிய இரத்தக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட பொதுஜன முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார். இது குறித்து ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் கூட்டமொன்று அண்மையில் பலாங்கொடையில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின் படி, இம்மாவட்டத்தில் 1356 சிறுவர்கள் போசாக்குக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 838 பேரின் பெற்றோர் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். 4351 கர்ப்பிணித் தாய்மார் இரத்தக் குறைபாட்டு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இரத்தினபுரி மாவட்டம் உட்பட நாட்டில் இவ்வாறான சுகாதாரக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களைப் பாதுகாக்கவும் சிறுவர்களின் போசாக்கை அதிகரிக்கவும் இந்த அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.









தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக குறைந்த வருமானம் பெறும் நுவரெலியா, உடபுஸ்ஸல்லாவை - ரப்பான தோட்டத்தில் பெண்கள் தலைமை தாங்கும் சுமார் 100 குடும்பங்களுக்கு பதுளை நண்பர்கள் அமைப்பினரால் தலா 2500 ரூபா பெறுமதியான அவசரகால உலருணவுப் பொருட்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (8) வழங்கிவைக்கப்பட்டன. இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (நடராஜா மலர்வேந்தன்)

# முல்லைத்தீவு குடும்பஸ்தர் ஒருவர் வவுனியாவில் நகைகளுடன் கைது

*வவுனியா நிருபர்*



முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் (09.) தெரிவித்தனர்.

வவுனியா, திருநாவற்குளம் பகுதியிலுள்ள வீடொன்றினுள் கடந்த 3 ஆம் திகதி வீடு புகுந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரால் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட் டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கமைவாக வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பூ.கஜேந்திரன் தலைமையில் பொலிஸ் சார்ஜன்களான திசாநாயக்கா (37348), திலீப் (61461), பொலிஸ் கான்டபிள்களான உபாலி (60945), தயாளன் (91792), தர்மகீர்த்தி (91983) உள்ளிட்ட பொலிஸ குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து திருடப்பட்டதாக கருதப்படும் காப்பு, சங்கிலி உள்ளிட்ட நகைகளும் மீட்கப்பட்டன. இதனையடுத்து மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பருத்தித்துறை நகரசபையில் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, சமத்துவக் கட்சி கூட்டணி ஆட்சி




*யாழ். நிருபர்*

பருத்தித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, சமத்துவக் கட்சி என்பன இணைந்து ஆட்சியமைத்துள்ளன.

நேற்று நடைபெற்ற புதிய தவிசாளர் தெரிவில் கூட்டமைப்பு - ஈ.பி.டி.பி - சமத்துவக்கட்சி வேட்பாளர் 8 வாக்குகளையும், எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி வேட்பாளர் 6 வாக்குகளையும் பெற்றனர்.

2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் பருத்தித்துறை தவிசாளர் பதவி விலகியதை தொடர்ந்து உருவான தவிசாளர் வெற்றிடத்திற்கு நேற்று தேர்தல் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேலுப்பிள்ளை நவரட்ணராஜா போட்டியிட்டார். அவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி, சமத்துவக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணியின் தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் ஆதரித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் கணபதிப்பிள்ளை பாலசுப்ரமணியத்தை முன்னணியின் 6 உறுப்பினர்களும் ஆதரித்தனர். ஈ.பி.டி.பியின் ஒரு உறுப்பினர் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

# சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிப்பு

சமூக செயற்பாட்டாளர் சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பௌத்த மதத்தின் புனிதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சேபால் அமரசிங்க கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வுபெற்ற ரயில்வே ஊழியர்களை மீண்டும் பணிக்கமர்த்த தீர்மானம்

ஓய்வுபெற்ற ரயில்வே ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள இணைத்துக் கொள்வது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ். குணசிங்க தெரிவித்துள்ளார்.

தேவையின் அடிப்படையில் அவர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியில் சேர்ப்பதற்கு பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்குமென தாம் நம்புவதாகவும் கூறியுள்ளார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 450 பேர் ஓய்வு பெற்றதையடுத்தே அத்தியாவசிய சேவைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் சுமார் 400 ஊழியர்களை மீளப் பணிக்கமர்த்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

# பேருவளை இஸ்லாமிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் ஐந்தாவது மௌலவியா பட்டமளிப்பு







*பேருவளை பீ.எம்.முக்தார்*

பேருவளை மாளிகாச்சேனை அஸ்ஸ அத்தியதுல் இஸ்லாமிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் ஐந்தாவது மௌலவியா பட்டமளிப்பு விழாவும் 10ஆவது வருட பூர்த்தி வைபவமும் கடந்த 8ஆம் திகதி நூன் கல்வி நிறுவக மண்டபத்தில் நடைபெற்றது.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அஷ்செய்ஹ் அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவியின் வழிகாட்டலுடன் இயங்கும் இந்த மகளிர் கல்லூரியானது அரச அங்கீகாரம் பெற்றதாகும்.

ஐந்தாவது பட்டமளிப்பு விழாவில் 11 பேர் பட்டம் பெற்றதோடு, அவர்களுக்கான சான்றிதழ்கள் அவர்களின் தந்தைமார்களிடம் வைபவத்தில் கையளிக்கப்பட்டது.

கலாபீட நிர்வாக சபைத் தலைவரும் நௌபல் ஜெம்ஸ் சாமிலா ஜூவலர்ஸ் உரிமையாளருமான நௌபர் ஹாஜியார் வரவேற்புரை நிகழ்த்தியதோடு அல்-மத்ரஸதுல் நபவிய்யா, அல்-மத்ரஸதுல் முஸ்தபவிய்யா மாணவர்களின் கஸீதாக்களும் இடம்பெற்றன.

மௌலவி முஹம்மத் பாஹிம் (முஸ்தபவி), மௌலவி முஹம்மத் நஸ்மி (முஸ்தபவி) ஆகியோர் பட்டமளிப்பு விழாவில் விசேட சொற்பொழிவாற்றினார்.

கலாபீட தலைவர் அப்துல் பாரிய, பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மத், நூன் கல்வி நிலைய நிறுவனப் பொறுப்பாளர் ஏ.எச்.எம்.முபாரக் (ஆசிரியர்), பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை பிரதி அதிபர் அப்துல் காதர் உட்பட உலமாக்கள், புத்திஜீவிகள், காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள், பெற்றோர்கள், குர்ஆன் மத்ரஸா சிறார்கள் பலரும் கலந்துகொண்டனர்.

டொக்டர் முஹம்மத் ஹுஸைன், டொக்டர் அஹம்மத் அதீக், டொக்டர் முஹம்மத் நிப்லான், பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத், மௌலவி முஹம்மத் நஸ்மி (முஸ்தபவி) ஆகியோர் பட்டமளிப்பு சான்றிதழை கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

மௌலவி முஹம்மத் நஸ்மி (முஸதபவி) பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்போது கூறியதாவது,

இன்று பட்டம் பெற்றுச்செல்லும் மௌலவியாக்கள் சமூகத்தின் எழுச்சிக்கு உழைப்பதோடு சமூகத்தை அழிவிலிருந்தும் பாதுகாப்பதற்கும் பாரிய பங்களிப்புச் செய்யலாம்.

போதைவஸ்தை இஸ்லாம் முற்றாக வெறுக்கிறது. இளம் சந்ததியினர் மத்தியில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையானது மிகப் பயங்கரமானதாகும். போதைப்பொருளற்ற சிறந்த இஸ்லாமிய சமூகத்தை உருவாக்குவதில் மௌலவியாக்களுக்கும் இன்று பாரிய பங்குள்ளது.

போதைப்பொருள் பாவனையை தடுப்பதிலும், அதனால் ஏற்படக்கூடிய சமூகச் சீரழிவுகளையும், ஆபத்துகளையும் சமூக பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மௌலவியாக்களுக்கு உள்ள பொறுப்புகள் முக்கியமானது.

நாம் எவ்வளவுதான் நல்ல அமல்களைச் செய்தாலும் கூட போதை பாவிப்போமேயானால் அந்த அமல்களினால் பிரயோஜனம் இல்லாமலாகி விடும் - என்றார்.

பட்டமளிப்பு விழா இரண்டாம் அமர்வு பெண்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## அமைச்சரவைத் தீர்மானங்கள்!...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)*

மாத்திரம் ஈடுசெய்துகொள்ளும் வகையில் தற்போதுள்ள மின்கட்டணத்தை திருத்தம் செய்வதைத் தவிர்ந்த வேறெந்த மாற்று வழிகள் இல்லையென்பது அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்கமைய, கீழ்க்காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்குவதற்காக தீர்மானிக்கப் பட்டுள்ளது:

இலங்கை மின்சார சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச மின்கட்டணத் திருத்தம் தொடர்பாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறித்த தரப்பினர்களிடம் கேட்டறிந்து ஆராய்ந்துள்ள ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், 15.02.2022ஆம் திகதிக்கு முன்னர் குறித்த திருத்தங்களை முன்வைத்தல்.

அதுவரைக்கும், மின்சக்தி தொழிற்றுறை தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள பொதுக் கொள்கை வழிகாட்டல் திருத்தங்களுக்கமைய இடைக்காலப் படிமுறைகளாக 2023.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை மின்சார சபையின் உத்தேச மின்கட்டணத்தைத் திருத்தம் செய்வதற்காக இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் திருத்தங்கள் எதுவும் சமர்ப்பிக்காவிடின், குறித்த திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மின்சார சபை படிமுறைகளை மேற்கொண்டு தொடர்ந்துவரும் மாதாந்த மின்கட்டணப் பட்டியலில் தேவையான இணக்கங்களை மேற்கொள்ளல்.

**04. மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் வசதிகளைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான விருப்பக் கோரல்கள்**

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் முழுமையான திட்டத்திற்கமைய, விமானப் போக்குவரத்துகளைப்போலவே விமானப் போக்குவரத்து அல்லாத ஏனைய பணிகளுக்காகவும் வர்த்தக வாய்ப்புகளை செயற்படுத்தி பல்நோக்கு வர்த்தக மத்திய நிலையமாக குறித்த விமான நிலையத்தை பரிமாற்றுவதற்காக ஆற்றல்வளம் காணப்படுகின்றது. அதனால், அரச-தனியார் பங்குடமை முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் குறித்த வசதிகள் மற்றும் சொத்துகளைப் பயனுறு வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, ஹெலிகொப்டர் போக்குவரத்து மற்றும் ஹெலிகொப்டர் போக்குவரத்து அல்லாத வர்த்தகங்களை மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் மேற்கொள்வதற்காக நேரடி மற்றும் மறைமுக விமான சேவைகள் தொடர்பான தொழில் முயற்சியாளர்களிடமிருந்து விருப்பக் கோரல்களை பெறுவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. கொரியா சுற்றுலா நிறுவனத்தின் நிதி அனுசரணை மூலம் இலங்கையில் மத்திய மற்றும் வடகீழ் வலயத்தை மையப்படுத்தி சமுதாயமட்ட சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குச்சவெளி சுற்றுலா அபிவிருத்தி பிரதேசத்தை மையப்படுத்தி கொரியா சுற்றுலா நிறுவனத்தின் நிதி அனுசரணையின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் சமுதாயமட்ட சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொரியா சுற்றுலா நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு குறித்த கருத்திட்ட யோசனை தொடர்பாக சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு முழுமையான உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2.172 தென்கொரிய வொன் பில்லியன்கள் (2.172 பில்லியன் வொன்) நிதியுதவி வழங்குவதற்கும், அதன் முதலாம் கட்டமாக குறித்த சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முழுமையான திட்டத்தைத் தயாரித்தல், பயிற்சி வேலைத்திட்டங்களை தயாரித்தல் மற்றும் முன்னோடி பயிற்சி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தென்கொரிய வொன் 400 மில்லியன்களை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கொரிய சுற்றுலா நிறுவனம் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையில் உடன்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கையில் உராய்வுநீக்கி மசகு எண்ணெய் (Lubricant) சந்தையை தளர்த்துதல் மற்றும் புதிய விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தல்**

1961ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் மற்றும் விளைவாய்ந்தவையான திருத்த ஏற்பாடுகள் மூலம் உராய்வுநீக்கி மசகு எண்ணெய் (Lubricant) தொழிற்துறைக்கு பிரவேசிப்பதற்கு எதிர்பார்த்துள்ள புதிய விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்வதற்காக மற்றும் அதற்கமைய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எமது நாட்டின் உராய்வுநீக்கி மசகு எண்ணெய் சந்தையை முழுமையாக தாராளமயப்படுத்தியுள்ளார்.

தற்போது எமது நாட்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 26 நிறுவனங்கள் உரிமப் பத்திரதாரர்களாக உராய்வுநீக்கி மசகு எண்ணெய் தொழிற்துறையில் ஈடுபடுகின்றன. பாவனையாளர்களுக்கு மிகவும் போட்டியான விலையில் உராய்வுநீக்கி எண்ணெயை கொள்வனவுசெய்வதற்கு வாய்ப்புக் கிட்டும் வகையில் உயர்தரத்துடன் கூடிய, புத்தாக்க மற்றும் போட்டித்தன்மையுடன் கூடிய உற்பத்திகளை எமது நாட்டின் சந்தைக்கு உள்வருவதற்கு வாய்ப்புகளை வழங்கும் வகையில் இலங்கை உராய்வுநீக்கி மசகு எண்ணெய் சந்தைக்குப் புதிதாக பிரவேசிப்பவர்களைத் தெரிவுசெய்வதற்காக தகைமைகளைக் கோருகின்ற விண்ணப்பங்களைக் கோருவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. ஏற்றுமதி அடிப்படையிலான பெற்றோலிய சுத்திகரிப்பு மற்றும் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பு நிலையத்தை அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நிறுவுதல்**

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் ஏற்றுமதியை நோக்கமாகக்கொண்ட பெற்றோலிய சுத்திகரிப்பு மற்றும் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கு அதிக ஆற்றல்வளம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறித்த ஏற்றுமதி வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்காக பல்வேறு தரப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். அதற்கமைய, அம்பாந்தோட்டை பிரதேசத்தில் பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்குப் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக விருப்பக் கோரல் அறிவித்தலை வெளியிடுவதற்கும், மற்றும் அவற்றில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்கின்ற முதலீட்டாளர்களின் விபரத்துடன் கூடிய உத்தேசத் திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கைக்கான திருத்தங்கள்**

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் வேலைத்திட்டப் புள்ளிவிபரங்களுக்கமைய, உலகளாவிய ரீதியில் தற்போது 3,50,000 இரசாயனப் பொருட்கள் சந்தையில் காணப்படுகின்றன. உலக சுகாதார தாபனத்தின் புள்ளி விபரங்களுக்கமைய இரசாயனப் பொருட்களின் வெளிப்படுத்தல்களால் வருடாந்தம் 2 மில்லியன் மக்கள் உயிரிழக்கின்றனர். அத்துடன், இரசாயனப் பொருட்களைத் தகுந்த வகையில் முகாமைத்துவம் செய்யாமையால் ஆட்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாவதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரசாயனப் பொருட்களின் பயன்பாடு சுற்றாடலுக்கும் மனித சுகாதாரத்திற்கும் ஏற்படுத்துகின்ற எதிர்மய விளைவுகளைக் கருத்திற்கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் 21ஆவது நிகழ்ச்சி நிரலில் நச்சு இரசாயனப் பதார்த்தங்களின் சுற்றாடல்நேயம்மிக்கதான மனித முகாமைத்துவம் உலகளாவிய ரீதியில் முன்னுரிமையளித்து கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை கையொப்பமிட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இரசாயனப் பொருட்களின் முகாமைத்துவம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு, குறித்த பிரதான அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர்களுடன் கலந்துரையாடி தயாரிக்கப்பட்டுள்ள இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 2022/2023 ஆம் ஆண்டுக்கான கண்டி தேசிய மருத்துவமனைக்கான மூலப்பொருட்கள் விநியோகத்திற்கான பெறுகை**

2022/2023ஆம் ஆண்டுக்கான கண்டி தேசிய மருத்துவமனைக்கான மூலப்பொருட்கள் விநியோகத்திற்கான பெறுகைக்காக தேசிய போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, ஜனதா ஃபூட் சப்ளயர்ஸ் நிறுவனத்துக்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. ஹயிட்ரோ/போபிக், நீர்விலக்கு முனைவுத் தன்மையுள்ள கண்வில்லைகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகை (வகை 1-7)**

இப்பெறுகை தொடர்பாக சர்வதேச போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, M/S விஷன் சொலூஷன் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்திற்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*** அடுத்துவரும் 25 ஆண்டுகள் -**

அடுத்துவரும் 25 ஆண்டுகளில் இலங்கையில் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளில் அபிவிருத்தியை எட்டும் நோக்கில் கீழ்க்குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி அமைச்சரவைக்குத் தெளிவூட்டியுள்ளார்.

**(i) கீழ்க்காணும் புதிய நிறுவனங்களைத் தாபித்தல்**

வரலாறு தொடர்பான நிறுவனம்
பொருளியல் மற்றும் வர்த்தக நிறுவனம்
பெண்கள் மற்றும் பால்நிலை தொடர்பான நிறுவனம்
அரச மற்றும் அரச கொள்கைகள் தொடர்பான பல்கலைக்கழகம்
விவசாய தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்
காலநிலை மாற்றங்கள் தொடர்பான பல்கலைக்கழகம்
விளையாட்டு பல்கலைக்கழகம்

**(ii) கீழ்க்காணும் பணிகளுக்கான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்:**

பெண்கள் சட்டங்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழு
பால்நிலை சமத்துவச் சட்டம்
பெண்களை வலுவூட்டல் சட்டம்
சிறுவர் பாதுகாப்பு சட்டம்
காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டம்
சமூக நீதி தொடர்பான ஆணைக்குழு சட்டம்
மீள் வனமாக்கல் மற்றும் தாவரக்காப்பு சட்டம்
உயிர் இருப்புகள் சட்டம்
மகாவலி ஆறு
சிங்கராஜ வனம்
சிவனொளிபாதமலை
வனாந்தரம் - மக்கள் சூனியப் பிரதேசம்
ஹோர்டன் சமவெளி
நக்கல்ஸ் மலைத்தொடர்
இராமர் பாலம்
சமுத்திர வளங்கள் ஆய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான சட்டங்கள் (விசேட வலயங்கள் )
முத்துராஜவெல (பாதுகாக்கப்பட்ட) சட்டம்
விசேட தேவையுடையவர்களுக்கான பாதுகாப்பு சட்டம்
கீழ்வரும் புதிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்,
நகர்ப்புற வனம் 75
குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்காக கொழும்பில் 1996 வீட்டு அலகுகள் தேசிய இளைஞர் தளம் தொடர்பான கருத்திட்டம் மற்றும் வேலைத்திட்டங்கள்

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

# தொழிலாளர் சேமநலன்கள் தொடர்பாக மலையக தொழிற்சங்கங்கள் தொழில் அமைச்சருடன் பேச்சு

(எஸ்.கணேசன்)

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் நிறைவடைந்ததையடுத்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் இடையில் கொழும்பில் தொழில் அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட சட்டங்கள் கொண்டுவரப்படும் எனவும் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆவதால், அவர்களின் தொழிற்துறையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன், தொழிலாளர்களுக்கு என்று பல சட்ட ஏற்பாடுகள் காணப்பட்டாலும், அது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நடைமுறைப்படுத்தும் வாய்ப்புகள் குறைவு.

அத்தோடு, தொழிலாளர்களுக்கு தொழில் திணைக்களங்களில் வழங்கப்படும் முக்கியத்துவங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களை பாதுகாக்கும் உரிமை சார்ந்த மற்றும்



நலன்புரி சார்ந்த சட்டமூலத்தை உருவாக்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தரப்பினர் மூலம் அமைச்சருக்கு யோசனை முன்வைக்கப்பட்டதாக அதன் உப தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

அது மட்டுமில்லாமல், ஏனைய தொழிற்சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், சிவில் அமைப்புகள் என அனைத்து தரப்பினரையும் இணைத்து கடந்த 200 வருடங்களில் நாட்டிற்கு பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் அடையாளத்தை ஏற்படுத்திய பெருந்தோட்டத் தொழிலாளர்களை கௌரவிக்கும் வகையிலான கருத்துகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக அதன் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், உப தலைவர் பாரத் அருள்சாமி, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மற்றும் ஒன்றிணைந்த மலையக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.






வவுனியா - கோவில்குளம் இந்துக்கல்லூரியில் புதிய அதிபர் நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (10) பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கோவில்குளம் இந்துக்கல்லூரியில் புதிய அதிபர் நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அமைதியான கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# செரண்டிப் பவுண்டேஷன் நிதியத்தினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைப்பு

(கண்டி நிருபர்)

அக்குறணை, புளுகொஹொதென்ன பல்லேவெலிகெட்டிய பகுதியைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.





அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையினால் 50இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அவை வழங்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை இஸ்லாமிய செரண்டிப் பவுண்டேஷன் நிதியத்தின் தலைவர் அல்ஹாஜ் கே.எம்.எஸ்.எம்.ராசிக் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் தலைவர் என்.கருணாகரன், இஸ்லாமிய செரண்டிப் பவுண்டேஷன் நிதியத்தின் தலைவர் கே.எம்.எஸ், எம்.ராசிக், எம்.கைசர் மற்றும் பூஜாப்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் பாடசாலை உபகரணங்களை வழங்கினர் .



"ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்தி அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு மேற்கொண்டுவரும் கவனயீர்ப்புப் போராட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. வடக்கு - கிழக்கின் 8 மாவட்டங்களில் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த கவனயீர்ப்புப் போராட்டம், யாழில் நாவற்குழி சந்தியில் இடம்பெற்றது.

# முப்பது மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கந்தளாய் செயற்கை பசளை மத்திய நிலையம் கிடப்பில்

## யானைகளின் வாழ்விடமாக மாறி வருவதாக குற்றச்சாட்டு





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட சூரியபுர பிரதேசத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து நிர்மாணிக்கப்பட்டுவரும் திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் செயற்கைப் பசளை மத்திய நிலைய நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவுபெறாது காணப்படுகின்றன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் 30 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த செயற்கைப் பசளை மத்திய நிலையமானது காட்டு யானைகளின் வாழ்விடமாக மாறி வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட சூரியபுர ஒன்பதாம் கட்டைப் பகுதியிலேயே இந்த செயற்கைப் பசளை மத்திய நிலையம் அமையவுள்ளது.

குப்பைகளை பயன்படுத்தி செயற்கை உரங்களை தயாரிக்கும் மத்திய நிலையமானது கடந்த 2020.11.10ஆம் திகதி இயற்கை வளங்கள் அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இன்றுவரை இச்செயற்றிட்டம் முழுமை பெறாமல் காணப்படுவதோடு, இரவு மற்றும் பகல் வேளைகளில் யானைகள் அப்பகுதியை ஆக்கிரமிப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்றிட்ட நிலைய வளாகத்தைச் சுற்றி பற்றைக்காடுகள் வளர்ந்துள்ளதோடு, வேலிகள் இன்றியும் காணப்படுகின்றது. மேலும், கட்டாக்காலி நாய்களின் கூடாரமாகவும் மாறியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

கந்தளாய் - மூதூர் பிரதான வீதியில் அமைந்துள்ள இந்த செயற்கை பசளை மத்திய நிலையம் எப்போது நிறைவுபெறும் என எதிர்பார்ப்போடு காத்திருப்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒட்டமாவடி பத்திரிகை விற்பனை முகவர் நிலையத்தில் திருட்டு

(மீராவோடை நிருபர்)

ஓட்டமாவடியில் அமைந்துள்ள பத்திரிகை விநியோக முகவர் நிலையத்தில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை (5) மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பத்திரிகை முகவர் நிலைய உரிமையாளர் அவசர வேலை நிமித்தம் நிலையத்தை விட்டு அருகிலுள்ள கடை ஒன்றுக்கு சென்றதை அவதானித்த திருடன், அங்கிருந்த சுமார் 85 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தை திருடிச் சென்றுள்ளான்.

குறித்த திருடன் நிலையத்தினுள் புகுந்து பணத்தை திருடிச் செல்லும் காட்சி சி.சி.டி.வி கெமராவில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், திருடனை கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர்

(அப்துல்சலாம் யாசீம், ரவ்பிக் பாயிஸ்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர் திருகோணமலை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் நேற்று (10) தமது கட்டுப்பணத்தை செலுத்தினர்.

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப் பணத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் உட்பட மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரள ஆகியோரின் பங்கேற்றலுடன் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.



இதன்போது பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் மொட்டுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் இதற்கான தீர்வு விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# விமான நிலையத்தில் மயங்கி விழுந்த கனடா பயணி உயிரிழப்பு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணி ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை பதிவாகியுள்ளதுடன், இவரது மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கட்டார் நாட்டிலிருந்து வருகை தந்த பயணி ஒருவர் வருகை முனையப்பகுதியில் மயக்கமுற்று கீழே விழுந்த நிலையில்,




மரணித்துள்ளார்.

55 வயதுடைய கனடாவைச் சேர்ந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்பதோடு, பிட்டகோட்டே பகுதியில் வசிக்கும் உறவினரை பார்வையிடுவதற்காக அவர் வருகை தந்துள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த பயணி உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.







யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 49ஆவது நினைவேந்தல் நேற்று செவ்வாய்க்கிழமை (10) யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதிமுதல் 10ஆம் திகதிவரை யாழில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

# உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையில் ‘மீண்டும் பாடசாலைக்குச் செல்லுதல்’ நிகழ்வு

## பழைய மாணவ, மாணவிகள் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரிய, ஆசிரியைகள் சுமார் 3000இற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

















உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் பாடசாலையின் மாணவ, மாணவிகள் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரிய, ஆசிரியைகள் “மீண்டும் பாடசாலைக்குச் செல்லுதல்” என்னும் நிகழ்வு, பாடசாலையின் அதிபர் ஏ.எம்.எம்.ஜரூக் தலைமையின் கீழ் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாட்டுக் குழுத் தலைவர் எஸ்.எச்.எம். ஆஸீக்கின் வழிகாட்டலுடன் பெருவிழாக் கோலத்துடன் வரலாறு காணாத பழைய மாணவர் மாணவிகளின் பங்கேற்புடன் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் உனைஸ் எம்.ஆரிப்பும், சிறப்புப் பேச்சாளராக மாத்தளை கல்வி வலயப் பணிப்பாளர் ஜே.எம்.இக்பாலும், கல்வி அதிகாரிகள், ஓய்வுபெற்ற ஆசிரிய, ஆசிரியைகள் மற்றும் பழைய மாணவ, மாணவிகள் என சுமார் 3000இற்கும் மேற்பட்டவர்கள் சமுகமளித்தனர்.

இதில் விசேட அம்சமாக - இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கென மேற்கத்திய நாடுகளில் இருந்தும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தும் சுமார் 50இற்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் சமுகமளித்தமை குறிப்பிடத்தக்கது.

20.8 மில்லியன் செலவில் மீண்டும் பாடசாலைக்கு சமுகமளித்த பழைய மாணவர்களின் மூலம், பாடசாலையிலுள்ள விளையாட்டு மைதானம் புனரமைத்தல், பாடசாலையை சுற்றிவர பாதுகாப்புச் சுவர் நிர்மாணித்தல், முன் நுழைவாயில் கேட் உள்ளிட்ட பாடசாலையில் காணப்படும் அனைத்து பௌதீக வளப் பற்றாக்குறைகளையும் நிவர்த்திசெய்வதற்காக நிதிகள் சேகரிக்கப்பட்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது பழைய மாணவர்கள் மீண்டும் வகுப்புகளுக்குச் சென்று கற்றல், உயர பலூன்கள் பறக்க விடுதல், பேண்ட் வாத்தியம் இசைத்தல், கண்காட்சி, ஓய்வுபெற்ற ஆசிரிய, ஆசிரியைகளைக் கௌரவித்தல், பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்திற்காக நிதி சேகரித்தல், சமுகமளித்த அனைவருக்கும் பகல் போசன விருந்து போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் நாட்டின் சுபீட்சத்துக்கும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் நல்லாசி வேண்டி விசேட துஆப் பிரார்த்தனையை உக்குவளை ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் ராயிஸ் முத்தார் நிகழ்த்தினார். நன்றியுரையை ஓய்வுபெற்ற முன்னாள் பிரதி அதிபர் பரீனா கலீல் நிகழ்த்தினார்.

### இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.ஜரூக் உரையாற்றும் போது,

அஜ்மீர் தேசிய பாடசாலையின் வரலாற்றில் இன்றைய தினமானது பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு தினமாகும். நூற்றாண்டுகளைக் கடந்து வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கின்ற இந்தப் பாடசாலை எதிர்காலத்தில் நல்ல பல திட்டங்களோடு மேலும் வளர்ச்சியடைய - அபிவிருத்தியடைய வேண்டும் என்ற அடிப்படையில் பிரம்மாண்டமாக திட்டமிட்டு நடத்தப்படுகின்ற இந்த நிகழ்வில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய நாள் அஜ்மீர் பாடசாலையின் வளர்ச்சிக் கட்டத்தில் ஒரு மைல்கல்லான நாள். அஜ்மீரில் கல்வி கற்ற நல்லுள்ளங்கள் அனைவரும் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள். பிரம்மாண்டமான முறையில் எல்லா உறவுகளையும் இணைத்து எதிர்காலத்தில் முன்னேற்றகரமான ஒரு பாடசாலையாகவும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடத்தி நூற்றாண்டு கண்ட இந்தப் பாடசாலையை தலைசிறந்த நல்லதொரு பாடசாலையாக மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் எமது பழைய மாணவர் சங்கத்தினர் சுமார் இரண்டு மாதங்கள் திட்டமிட்டு சரியான முறையில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளார்கள். எனவே, இப்பாடசாலையின் அதிபர் என்றவகையில் என்னுடைய உள்ளம் கனிந்த நன்றி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

### மாத்தளை கல்வி வலயப் பணிப்பாளர் எம்.ஜே.இக்பால் சிறப்புரையாற்றும்போது,

அஜ்மீர் தேசிய பாடசாலையின் இந்த நாள் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நன்நாள் என்று விளிக்கப்பட்டது. அதனை நானும் சிலாகித்து உறுதிப்படுத்துகின்றேன். எனது வாழ்க்கையில் இவ்வாறான மாபெரும் கூட்டம் காண்பதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலையின் வரலாற்றில் 1920இல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை எனக் கருதுகின்றேன். சுமார் 45 வருடங்கள் தன்னுடைய பெயரை உக்குவளை பிரதேசத்திலும் மாத்தளை மாவட்டத்திலும் இலங்கை பூராவும் மட்டுமல்ல, சர்வதேச ரீதியாகவும் தன்னுடைய புகழை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்ற ஒரு பிரசித்திபெற்ற பாடசாலை என்பதில் எவ்வித ஐயமில்லை.

இன்று பாடசாலையைப் பொறுப்பேற்றுள்ள குழு ஒரு கட்சிதமான - ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்து இந்நாளில் உங்கள் எல்லோரையும் ஒரே மண்டபத்தில் வீற்றிருக்கச் செய்திருக்கின்றது என்றால் இந்தக் குழுவை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.









#### ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

உக்குவளை பிரதேசம் மட்டுமல்ல, உக்குவளை பிரதேசத்திற்கு அப்பாலும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற பல நூற்றுக்கணக்கானவர்கள் இந்த வைபவத்தில் ஒன்றுகூடியிருக்கிறார்கள். குறிப்பாக, மகளிர் அணியைப் பார்த்தால், வீட்டில் காலை உணவு நடந்ததோ என்னவோ, வீட்டில் பிள்ளைகளுக்கு என்னவோ ஏதோ, கணவர்மார்கள் எங்கே ஏதோ எனது பாடசாலைக்கு நான் போயாக வேண்டும் என்று இந்தப் பாடசாலையின் வரலாற்றிலும் வளர்ச்சியிலும் தாய்மார்களின் அக்கறை எந்தளவு காட்டப்பட்டுள்ளது என்பதை இந்த மாபெரும் விழாவின் மூலம் நாம் கண்டுகொள்ளலாம்.

அவ்வாறென்றால் ஏன் இந்தக் கூட்டம்? ஒன்று, நான் கற்ற பாடசாலை இது என்ற பிரதான கூற்று. இரண்டாவது, எனது பிள்ளை கற்கக்கூடிய பாடசாலை இது அல்லது எனது பேரப்பிள்ளைகள், குடும்ப உறவினர்களின் பிள்ளைகள் கற்கக்கூடிய ஒரு கலாசாலையாக இருப்பதனால் நாம் இன்றைய நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றோம். உண்மைதான். ஒரு பாடசாலையின் புகழ் எங்கே இருக்கின்றது.

இவ்வாறான பிரம்மாண்டனமான மக்கள் ஆதரவு இருக்குமேயானால், அது பாராட்டக்கூடிய பாடசாலையே. அதுவும் எல்லோருடைய உள்ளத்திலும் சிறந்த பாடசாலை என்ற பெயரைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பாடசாலையாகக் கருதப்படும். இன்று நாட்டிலுள்ள மிகச் சிறந்த பாடசாலைகள் எது என்று எம்மைக் கேட்கும்போது நாம் ஆனந்தா கல்லூரி, ரோயல் கல்லூரி, விசாகா கல்லூரி என்போம். மத்திய மாகாணம் என்றால் அது தர்மராஜ கல்லூரி, கண்டி மகளிர் உயர்தரக் கல்லூரி, புனித சில்வெஸ்டர் கல்லூரி என்போம். இன்று உங்களிடத்தில் இந்த நாட்டில் சிறந்த பாடசாலை எது என்று கேட்டால் நீங்கள் எல்லோரும் நிச்சயமாக உங்கள் உள்ளத்தில் அடித்தளத்தில் இதயத்தில் இரும்பாக இருக்க வேண்டியது அஜ்மீரைத் தவிர வேறு எதுவும் இல்லை.

பாடசாலையில் பல விழாக்கள், பரிசளிப்பு விழா, விளையாட்டு விழா, மணி விழா, வைர விழா, பாராட்டு விழா என நிகழ்ச்சிகள் நூற்றுக்கணக்கானவை நடந்தேறிக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். அன்றும் நடந்தது இன்றும் நடைபெறுகின்றது. இவை மட்டுமல்ல, எல்லாப் பாடசாலைகளிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஒரு பாடசாலையின் இவ்வாறான வைபவங்களில்தான் நிச்சயமாக பலரையும் அறியச்செய்யக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஒரு புகழ்பெற்ற பாடசாலை என்கின்றபோது பாடசாலையில் நடக்கக்கூடிய மிகச் சிறந்த அம்சங்களைக் கருத்திற்கொண்டுதான் அது மிகச் சிறந்த பாடசாலை என்று கருதுவோம். ஆகவே, இந்த விழாவில் - இந்தக் கூட்டத்தில் பாடசாலைக்கான மாபெரும் விழா நடக்கிறதென்று கூறினால் இதனை நாடளாவிய ரீதியில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியாகவும் பிரகாசிக்கச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, ஒரு பாடசாலையின் புகழ் எங்கே இருக்கவேண்டும் என்று சொன்னால், அது உங்களுடைய ஒத்துழைப்பில்தான் இருக்கின்றது. நீங்கள் எண்ணக்கூடிய எண்ணங்கள் எவ்வளவு நேரானதாக இருக்கின்றதோ அந்தளவில் வெற்றியைக் காணலாம். பாடசாலையின் வெற்றி, பாடசாலை மாணவர்களின் அடைவிலேயே தங்கியிருக்கின்றது. மாணவர்களின் அடைவு என்பது பிரதானமாக பாடசாலையில் கற்கின்ற மாணவர்களின் பெறுபேறுகளிலேயே தங்கியிருக்கின்றது. க.பொ.த. சாதாரண தரம், உயர் தரம் போன்றவற்றின் மாணவர்களின் சாதனைகள், விளையாட்டுச் சாதனைகள், பிற போட்டிகளில் காணக்கூடிய சாதனைகள் போன்றவையே. இவை பாடசாலைகளில் செய்யவேண்டிய சாதனைகள். இதற்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக முக்கியம். இந்த ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றிணைந்து இந்தப் புகழைக் கொண்டுவர வேண்டுமென்றால் இவர்களால் மட்டும் இதனைச் சாதித்து விட முடியுமா? முடியாது.

எந்தெந்த பாடசாலைகள் இன்று புகழீட்டிக் கொண்டிருக்கின்றனவோ அதற்குக் காரணம், அத்தனை பாடசாலைகளுக்கும் இவ்வாறான பாடசாலைகளும் உள்ளே இருக்கின்ற சாதனைகளுக்கு தோளோடு தோள் நின்று உதவக்கூடியவர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் என்று சொன்னால் வேறில்லை. ஆகவே, பழைய மாணவர்கள் தோளோடு தோள் நிற்கின்றபோது பாடசாலையின் வெற்றி, ஆசிரியர்களின் வெற்றி, அர்ப்பணிப்பு வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என்று எங்களுடைய புகழை பறைசாற்றக்கூடியதாக இருக்கும். அவ்வாறாள உண்மையை அறிந்துகொண்ட பின்னர்தான் அஜ்மீர் தேசிய பாடசாலை இந்தப் பழைய மாணவர் சங்கம் இதற்குப் பின்னால் 2023இல் தொடர்ந்து வரக்கூடிய வருடங்கள் நாம் எதைச் சாதிப்போம், எவ்வாறு சாதிப்போம், எவ்வாறு திட்டமிட்டுள்ளோம் என்பதை கருத்திற்கொண்டு இவ்வாறான வைபவத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எதிர்கால சந்ததியினர்களின் நலன் கருதி பழைய மாணவர்கள் முன்னெடுத்த ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன - என்றார்.

### இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் உனைஸ் எம்.ஆரிப் உரையாற்றும்போது,

இது போன்றதொரு நிகழ்வை ஏற்பாடு செய்வதென்பது இலகுவான காரியம் அல்ல. இலங்கையில் நகரங்களில் இருக்கின்ற மிகப் பிரபலமான பாடசாலைகள் கூட இவ்வாறான ஒன்றுகூடல்களைச் செய்வதில் பல இன்னல்களைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன. மாணவர்களை ஒன்றுகூட்டுதல், மாணவர்களை அழைத்தல், அதற்காக நிதியைப் பெற்றுக்கொள்தல், நிதியை ஒதுக்குதல் போன்ற விடயங்களில் மிகப்பெரிய சவாலாக இருக்கின்ற காலகட்டத்தில் உக்குவளை என்ற ஒரு கிராமப்புற பிரதேசத்தில் இவ்வாறானதொரு மிகப் பிரம்மாண்டமான நிகழ்ச்சியை செய்திருப்பதென்பது பாராட்டத்தக்க விடயம். இதற்காக பின்நின்று உழைத்த அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். இதில் 2500இற்கும் மேற்பட்ட பழைய மாணவ, மாணவிகள் ஒன்றுகூடி இருக்கின்றார்கள். இன்றைய இந்த நிகழ்வு வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

பாடசாலை ஒன்றில் பழைய மாணவர் சங்கம் என்றால் என்ன என்று நாங்கள் கற்றோம். பாடசாலையின் பெயரைச் சுமந்து சென்றோம். பாடசாலையில் கல்வி கற்றதனால் தொழிலைப் பெற்றுக்கொண்டு எமது குடும்பத்தில், எமது நாட்டில், எமது சூழலில் நல்ல நிலைகளில் வாழ்கின்றோம். அதை நாங்கள் பெருமையாகக் கதைத்துக்கொண்டிருக்கின்றோம் என்பது மட்டுமா என்றதொரு வினா? நான் நினைக்கின்றேன். எந்தவொரு பாடசாலையில் கற்ற மாணவனும் எந்தவொரு பாடசாலையில் கற்ற மாணவியும் சொல்லிக்கொள்கின்ற விடயம்.

இன்று நான் கதைக்கப்போவது அதற்கும் அப்பாற்பட்ட ஒரு முக்கிய விடயம். பாடசாலையின் பழைய மாணவன் அல்லது பழைய மாணவி அப்பாடசாலையின் இதயத்தைப் போன்றவர்கள். உடலுக்கு எவ்வளவு இதயம் முக்கியமோ அதேபோன்று அப்பாடசாலையின் பழைய மாணவர்களும் மாணவிகளும் முக்கியமானர்கள் என்று நான் நினைக்கின்றேன்.

இதனடிப்படையில் பழைய மாணவர்கள், மாணவிகள் ஒரு சங்கமாக இயங்குகின்றபோது சில விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும் அதன் முக்கியமான விடயங்கள்தான் பௌதீக வள அபிவிருத்தி திட்டம். இத்திட்டத்தை இன்று உங்கள் முன் சமர்ப்பிக்க இருக்கின்றார்கள்.

கல்வி முறைமையின்படி ஒரு மாணவனின் அடிப்படைத் தேவையை நிவர்த்திசெய்தால்தான் தரமிக்க கல்வியை வழங்கலாம் என்பது கல்வியோடு தொடர்பட்ட அனைவருக்கும் நன்கு தெரியும். அதில் வகுப்பறை வசதிகள், சுகாதார வசதி, நீர் வசதி, மைதான வசதி என்று அடுக்கிக் கொண்டே போகலாம். அந்த அடிப்படை உரிமை வழங்கப்பட்டதன் பின்னர்தான் கல்வி என்ற இரண்டாம் கட்டத்திற்குச் செல்ல முடியும். எனவே, இதனடிப்படையில் பழைய மாணவர் சங்கம் உங்களுடைய தேவைகளை சரியாகவும் தெளிவாகவும் இனங்கண்டு கொண்டிருக்கின்றதென்பது சந்தோஷமான விடயம் - என்றார்.

**-இக்பால் அலி-**







# நியூசிலாந்தை இலகுவாக வீழ்த்திய பாகிஸ்தான்



நியூசிலாந்து அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி அங்கு 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடுகிறது. இதில் முதலாவதாக நடைபெற்ற டெஸ்ட் தொடர் 0-0 என சமனில் முடிந்தது. அடுத்து இரு அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் கராச்சியில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 255 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் அணி தரப்பில் நசீம் ஷா 5 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். இதையடுத்து 256 என்ற வெற்றி இலக்குடன் ஆடிய பாகிஸ்தான் அணி இறுதியில் 48.1 ஓவரில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது. 5 விக்கெட்டுகள் வீழ்த்திய நசீம் ஷா போட்டியின் ஆட்ட நாயகனாக தெரிவானார். இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# பிரான்ஸ், வேல்ஸ் உதைபந்து அணியின் தலைவர்கள் ஓய்வு





(ரமணி)

சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளிலிருந்து பிரான்ஸ் கப்டன் ஹியூகோ லொரிஸ், வேல்ஸ் நாட்டின் நட்சத்திர வீரர் கரத் பேலே ஆகிய இருவரும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளனர்.

2008, நவம்பரில் உருகுவேக்கு எதிரான நட்பு ஆட்டத்தில் 21 வயது இளைஞராக சர்வதேச அரங்கில் அறிமுகமான லோரிஸ். கட்டாரில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவிடம் பெனால்டியில் தோல்வியடைந்த மூன்று வாரங்களுக்குப் பிறகு பிரான்ஸ் கப்டன் ஹியூகோ லோரிஸ் தனது 36ஆவது வயதில் சர்வதேச கால்பந்திலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். பிரான்ஸ் அணிக்காக அதிகமான 145 போட்டிகளில் விளையாடினார். 121 போட்டிகளில் கப்டனாக செயற்பட்டார்.

வேல்ஸ் அணிக்காக 111 போட்டிகளில் விளையாடி சாதனை படைத்த பேல், இரண்டு ஐரோப்பிய சம்பியன்ஷிப்களுக்கும் யூரோ 2016இன் அரையிறுதிக்கும் வேல்ஸை அழித்துச் சென்றார். 1958இற்குப் பிறகு முதல் உலகக் கிண்ணப் போட்டியில் வேல்ஸ் விளையாட முக்கிய பங்காற்றினார்.

664 போட்டிகளில் 226 கோல்கள், 5 சம்பியன் லீக் உட்பட 22 கிண்ணங்கள் வெற்றி பெற உதவினார். கரத் பேலின் சைக்கிள் சொட் கோல்கள் மறக்க முடியாதவை.

# பேருவளை உதைபந்தாட்ட லீக் தலைவர் வெற்றிக் கிண்ணம் தர்கா நகர் யுனைடெட் வசம்



(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

தர்கா நகர் யுனைடெட் விளையாட்டுக் கழகத்திற்கும் வெயன்கல்லை ரெட்லைன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தர்கா நகர் யுனைட்டெட் அணி 3 1 கோல் வீதத்தில் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவாகியது.

இப்போட்டிக்கு பிரதான மஸ்தியஸ்தராக மாலக துமுது கடமையாற்றியதுடன், உதவி மஸ்தியஸ்தர்களாக ஸம்பத் குமார, எம்.ஹுஸைன் மற்றும் எம்.என்.எம்.முஸம்மில் ஆகியோர் கடமையாற்றினர். தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்பட்ட நொகவுட் சுற்றுப் போட்டியில் பேருவளை கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட 20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

பேருவளை உதைபந்தாட்ட சங்கத் தலைவர் எம்.எஸ்.எம்.றிஸ்வான் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் இலங்கை உதைபந்து சம்மேளன முன்னாள் தலைவர் எம்.ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

பேருவளை உதைபந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகித்து கால்பந்தாட்டத் துறைக்கு பணி செய்த முன்னாள் தலைவர் ஏ.ஆர்.எம்.பதியுதீன் உட்பட பல்வேறு போட்டிகளில் சாதனை நிலைநாட்டிய வீரர்கள் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பேருவளை உதைபந்தாட்ட சங்க செயலாளர் முஹம்மத் ஸினான், பொருளாளர் ஏ.ஜே.எம்.அக்பர் உட்பட உறுப்பினர்கள், ஊடகவியலாளர் அஸாம் அமீன், பிரதேச சபை உறுப்பினர்களான பைஸான் நைஸர், ஹஸீப் மரிக்கார், முஹம்மது ருஷ்தி, யுனைடெட் கழகத் தலைவர் பாயிஸ் ஹாஜியார், ராஜித சேனாரத்ன பவுண்டேசன் செயலாளர் பெ.ஜெஸுக் அஹமட், இரத்தினக்கல் வர்த்தகர் ஜெஸ்லான் ஹாஜியார் உட்பட பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# ரொனால்டோவுக்கு விதிவிலக்கு அளித்த சவூதி



கிறிஸ்ரியானோ ரொனால்டோ மற்றும் அவரது காதலி ஜோர்ஜினா ரோட்ரிக்ஸ் தம்பதி சவூதி அரேபியாவில் ஒன்றாக வாழ அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. திருமணம் செய்துகொள்ளாத தம்பதிகள் ஒன்றாக வாழ சவூதி அரேபியாவில் சட்டம் அனுமதிக்காத நிலையில் ரொனால்டோவுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சவூதி அரேபியாவின் அல்-நஸர் கால்பந்து அணியில் ஜாம்பவான் ரொனால்டோ சமீபத்தில் இணைந்துள்ளார். இரண்டரை ஆண்டுக்காலம் குறித்த அணியில் அவர் ஆடவுள்ளார். இந்நிலையில், ரொனால்டோவுடன் அவரது காதலி ஜோர்ஜினா ரோட்ரிக்ஸ் மற்றும் இவர்களின் 5 பிள்ளைகளும் ரியாத் நகருக்கு குடிபெயரவுள்ளனர்.

ரொனால்டோ - ஜோர்ஜினா தம்பதி இதுவரை திருமணம் செய்துகொள்ளவில்லை. இந்நிலையில், சவூதி அரேபியா நிர்வாகம் ரொனால்டோ தம்பதியை ஒன்றாக வாழ அனுமதிக்குமா என்ற கேள்வி எழுந்தது. அதுமட்டுமன்றி, சவூதி அரேபியா தடை விதிக்கவும் வாய்ப்புள்ளது எனவும் இதனால் அல்-நஸர் அணியில் அவர் விளையாடுவது சந்தேகமே எனவும் கூறப்பட்டது. ஆனால், சவூதி அரேபியா நிர்வாகம் ரொனால்டோ விவகாரத்தில் விதிவிலக்கு அளித்துள்ளதுடன், ரொனால்டோ தம்பதி தங்கள் பிள்ளைகளுடன் ஒரே குடியிருப்பில் தங்குவார்களென அறிவித்துள்ளது.

இருப்பினும், சட்டச்சிக்கல் அல்லது குற்றவியல் நடவடிக்கை ஏதேனும் நடந்தால் தொடர்புடைய சட்டத்தை சவூதி அரேபியா அமுல்படுத்தும் என்றே கூறுகின்றனர். 2016இல் இருந்தே ரொனால்டோ - ஜோர்ஜினா தம்பதி ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். அத்துடன், வாடகை தாயார் மூலம் பெற்றெடுத்த இரண்டு இரட்டையர்கள் உட்பட ரொனால்டோவுக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர்.

# தமிழ் அரசியல் கட்சிகளை ஓரணியில் திரளக் கோரி கிழக்கில் ஆர்ப்பாட்டம்

(கனகராசா சரவணன், எவ்.ஆர்.எம்.பர்ஹான்)

மட்டக்களப்பு




திருகோணமலை



வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் திரண்டு முன்வைக்கவேண்டும். அப்படி முன்வைக்காமல் விட்டால் மக்களாகிய நாங்கள் தேர்தலில் வீடு தேடிவரும்போது வாக்களிக்கமாட்டோம் என கோரிக்கை முன்வைத்து நேற்று (10) மட்டக்களப்பு காந்தி பூங்காவிலும் திருகோணமலையிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கில் 8 மாவட்டங்களிலும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுமாறு வலியுறுத்தி கடந்த 5ஆம் திகதி தொடக்கம் நேற்று 10ஆம் திகதிவரை தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இறுதிநாளான நேற்றுக் காலை 10 மணிக்கு நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டனர்.

இதன்போது வடக்கு, கிழக்கு சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு பேச்சுவார்த்தையில் சிறுபான்மை தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு ஒரே குரலில் ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு, கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதில் பெண்கள் 50 வீதம் இருப்பது உறுதி செய்யப்படவேண்டும். வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாக அமையவேண்டும். தற்போது வடக்கு, கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் மத கலாசார இடங்கள் தொல்பொருள் பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டு, ஆக்கிரமிக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் உடன் நிறுத்தல் வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

இன்று கொரோனாவை விட கொரோனா என்ற பொருளாதாரத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நாங்கள் தெரிவுசெய்து நாடாளுமன்றம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பிய அரசியல்வாதிகள் எங்கள் மக்களைப்பற்றி ஒருநாளும் சிந்திப்பதில்லை. அவர்கள் சிந்தித்திருந்தால் நாங்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டிய தேவை இல்லை என வாசகங்கள் கொண்ட சுலோகங்களுடன் கோஷம் எழுப்பியவாறு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விலகிச்சென்றனர்.

இதேவேளை, திருகோணமலை தபால் நிலைய சந்தி ஊடாக மகேசர் விளையாட்டு மைதானம் வரை சுலோகங்களை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு நடைபவனியானது வருகைதந்து மகேசர் விளையாட்டு மைதானத்திற்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதில் இளைஞர்கள், சமூக அமைப்பின் பிரதிநிதிகள், பெண்கள் என 500இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கந்தளாயில் இனந்தெரியாதோரால் திருடப்பட்ட ஆறு எருமைக் கன்றுகள் பொலிஸாரால் மீட்பு





(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீனி அலை நான்காம் கட்டைப் பகுதியில் கடந்த நான்காம் திகதி காணாமல்போன ஆறு எருமைக் கன்றுகள் நேற்று முன்தினம் (09) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கிறனர்.

ஒரு வருடம் மற்றும் ஆறு மாத கன்றுகளே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து கந்தளாய் அக்போபுர பொலிஸாரின் சுற்றிவளைப்பில் இவ்வாறு திருடப்பட்ட கால்நடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடத்திச் செல்லப்பட்ட எருமைக் கன்றுகள் வெவசிரிகம பகுதியில் வீட்டுக்குப் பின்னால் மறைத்து கட்டப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு, கந்தளாய் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2021

## பெறுபேறுகள் வெளியிடப்படவில்லையென பரீட்சார்த்திகள் கவலை

(மாளிகைக்காடு நிருபர்)

2021ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) (Sri Lanka Teacher Educator Service(Limited) Competitive Examination-2021) பரீட்சையின் பெறுபேறுகள் ஒரு வருட காலமாகியும் இதுவரையில் பரீட்சை திணைக்களத்தினால் அல்லது கல்வி அமைச்சினால் வெளியிடப்படாமல் உள்ளமை குறித்து பரீட்சார்த்திகள் கவலை வெளியிட்டுள்ளனர்.


பாரிய பொருளாதார ரீதியான சிரமத்திற்கு மத்தியில் குறித்த பரீட்சையை நம்பிக்கையோடு எழுதிய பரீட்சார்த்திகளின் முடிவை சுமாராக ஒரு வருட காலம் தாமதப்படுத்துவது அவர்களின் சட்ட ரீதியான எதிர்பார்ப்பை (Legitimate Expectation) மழுங்கடிப்பதாக அமைகின்றதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் காணப்படுகின்ற 19 கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து ஆசிரியர் பல்கலைக்கழகம் உருவாக்கவுள்ளதாக அண்மையில் கல்வி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். உண்மையில் எமது நாட்டில் இவ்வாறான ஒரு பல்கலைக்கழகத்தை அமைப்பது அதில் கல்வி கற்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே, குறித்த மட்டுப்படுத்தப்பட்ட ஆசிரியர் கல்வியியலாளர் சேவை பரீட்சையை எழுதிய ஆசிரியர்களினது பொறுபேற்றை உடனடியாக கல்வி அமைச்சு வெளியிட்டு அவர்களை நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி ஆட்சேர்ப்பை மேற்கொள்வதன் மூலம் குறித்த ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் பொறுப்பான அமைச்சரிடம் இது தொடர்பான பதிலை எதிர்பார்ப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.




ஏற்கனவே ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பிலும் எதுவிதமான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள்தான் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆசிரியர் கல்வியலாளர் சேவைக்குள் உள்வாங்கப்படுவதானது புதிய வகை நியமனமாக அமையாது என்பதால் அதனை உடனடியாக வழங்குவதற்கு அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரீட்சார்த்திகள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரைத் தொடர்ந்து உறுப்பினர்கள் எழுவர் அதிரடியாக இராஜினாமா!


A.M.M.Naoshaad
333, M.P Road
Sammanthurai 8.
0777 895695

CC.
Returning Officer, Sammanthurai Pradeshiya Sabha - District Election Office Ampara
Commissioner of Local Government - Eastern Province
Secretary - All Ceylon Makkal Congress, 23/4 Charlemont Road, Colombo 6

(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷாட் தனது இராஜினாமா கடிதத்தை உத்தியோகபூர்வமாக தேர்தல் ஆணையாளருக்கு நேற்று முன்தினம் (09) அனுப்பிவைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.சி.எம்.சஹீல், எம்.எஸ்.சரீபா, எம்.ரீ.பௌசுள்ளாஹ், கே.எம்.இன்பவதி, என்.கோவிந்தசாமி, கே.குலமணி, ஆர்.வளர்மதி ஆகியோர் தங்களின் இராஜினாமா கடிதத்தை சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட்டிடம் நேற்று கையளித்தனர்.

இராஜினாமா கடிதங்கள் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் தென்படுகின்றன. அவ்வாறு கலைக்கப்படாவிட்டாலும் கூட எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவுக்கு வரும்.

# கிழக்கை வேறு மாகாணத்தோடு இணைப்பதை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்

## ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கிறது அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா




(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் இரண்டு மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில், இம்மாகாணம் வேறெந்த மாகாணத்தோடும் இணைக்கப்படுவதை முஸ்லிம்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற விடயத்தை ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோமென அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மேற்படி உலமா சபையின் சார்பில் அதன் தலைவர் எஸ்.எச்.ஆதம்பாவா மௌலவி, ஏ.எல்.நாசிர் கனி மௌலவி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்தபோது 2002ஆம் ஆண்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அவர் தலைமையில் அரசு - புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவ்வேளையில் 11.10.2002ஆம் திகதியன்று கிழக்கு மாகாண ஜம்இய்யதுல் உலமா பிரதிநிதிகள் அதன் தலைவர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா தலைமையில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இவ்விடயம் பற்றி பேசியிருந்தோம். அவ்வேளையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்போது முஸ்லிம்களுக்கு எவ்வித அநீதியும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாதென உறுதியளித்திருந்தார்.

அத்துடன், அரசியல தீர்வு தொடர்பாக தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் தீர்வுத் திட்டங்களின் ஆவணத்தில் முஸ்லிம்களுக்குரிய தீர்வுத் திட்டமும் உள்ளடக்கப்படுமென்றும் தெரிவித்திருந்தார். அந்த வாக்குறுதியை உரிய நேரத்தில் அவர் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் இரண்டு மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில், இம்மாகாணம் வேறெந்த மாகாணத்தோடும் இணைக்கப்படுவதை முஸ்லிம்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற விடயத்தை இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்றுக்கொள்ளும் நாம், ஒரு சமூகத்தின் பிரச்சினையைத் தீர்க்கப்போய் அதனால் மற்றொரு சமூகத்துக்குப் பிரச்சினை ஏற்பட இடமளிக்கக்கூடாது என்ற விடயத்தையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம் - என்று அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா மேலும் தெரிவித்துள்ளது.

# கிழக்கு மாகாணத்தில் ஒரு வருடத்திற்குள் திரவப் பால் உற்பத்தி இரட்டிப்பாக்கப்படும்

## ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவிப்பு

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் தினசரி திரவப் பால் உற்பத்தியானது ஒரு இலட்சத்து அறுபத்து நான்காயிரம் லீற்றராக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

ஒரு வருடத்திற்கு முன்பு, உற்பத்தி மதிப்பு மேலே உள்ள எண்ணிக்கையில் பாதியாக இருந்தது. மாகாணத்தில் கால்நடை வளர்ப்பு செயற்பாடுகள் சிறப்பாக செயற்படுவதால் தினசரி பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமாகத் திரியும் கால்நடைகளால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் "நிலையான பால் பண்ணை" திட்டத்தின் கீழ் ஐம்பத்து இரண்டு மில்லியன் ரூபா செலவில் மாதிரி பால் பண்ணைகள் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.



ஒரு பண்ணை உயிர்வாயு அமைப்பு, கால்நடை கொட்டகை, இயற்கை உர உற்பத்தி அலகு, கால்நடை தீவனத்திற்கு புல் வளர்க்க ஏற்ற நிலம், மழைநீர் சேகரிப்பு அலகு ஆகியவையும் இதில் அடங்கும்.

மேலும், மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் இந்த நிலையான பால் பண்ணைகளை முன்மாதிரியாகக்கொண்டு ஏனைய விவசாயிகளையும் இந்தப் புதிய முறையில் இணைத்துக்கொள்ளும் வகையில் பல விசேட திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இதற்கிடையில், திருகோணமலை உப்புவெளியில் உள்ள அரசாங்க பண்ணையில் மாதிரி உயிர் வாயு ஆலையை நிர்மாணிப்பதற்காக 32 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், திரவப் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் கால்நடைகளின் மரபணு மேம்படுத்தும் விசேட முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் (9) காலை திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பில் தெரியவந்துள்ளது.

# இறக்காமம் பிரதேச செயலகத்தில் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கிவைப்பு





(மாளிகைக்காடு நிருபர்)

இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொதுமக்கள் நீண்டகாலமாக பராமரித்துவரும் காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் காணி அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பித்தும் இதுவரைகாலமும் கிடைக்கப்பெறாமல் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வந்தனர். இதனை அடிப்படையாகக்கொண்டு இறக்காமம் பிரதேச செயலாளரின் வழிகாட்டலுடன் செயலக காணிப் பிரிவினால் விசேட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துரிதகதியில் பொதுமக்களின் காணி தொடர்பான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவர்களுக்குரிய தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், குறித்த காணிகளுக்கு முறையான அரச அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிக்குட்பட்ட வரிப்பத்தான்சேனை-03 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்ட காலமாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஐ.எல்.இப்திகா பானு கலந்துகொண்டதுடன், இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நசீல், கணக்காளர் றிம்ஸியா அர்சாட், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஹம்சார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமீல், கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர் எச்.பி.இந்திரசிறி யசரட்ன பண்டார, காணி உத்தியோகத்தர் என்.எல்.எம்.மாஹிர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.நிசம்மா உம்மா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.நிசார்தீன், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள், பிரிவுக்குரிய கிராம உத்தியோகத்தர் மற்றும் பயனாளிகள் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**மூன்று கட்டங்களாக 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தப்போவதாக வீணை கட்சி அமைச்சர் டக்ளஸ் சொல்லியிருக்காரு எலுவா..? மத்தியில கூத்தாச்சு.. மாநிலத்தில தனியாட்சி.. எண்டு எம்.பி. பதவி எடுத்து ஒண்டுமே செய்யாம எல்லா ஆட்சியிலயும் அமைச்சராக இருந்த இவரு.. இப்ப 13ஐ 3ஆல பிரித்து தீர்க்கப்போறாராம்.! ஆராடாம்பி பேய்காட்டிறயள்!**

# மட்டு./செங்கலடி விவேகானந்தாவில் கணினி ஆய்வுகூட திறப்புவிழா



(மட்டக்களப்பு நிருபர்)

கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட மட்./செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தின் கணினி ஆய்வுகூட திறப்புவிழா நேற்று முன்தினம் (09) பாடசாலையின் அதிபர் கே.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கல்குடா வலய கல்விப் பணிப்பாளர் தி.ரவி, பிரதிக் கல்வி பணிப்பாளர் (திட்டமிடல்) எஸ்.துஷ்யந்தன் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் ஆலோசகர் குலேந்திரகுமார், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வலயக்கல்வி அலுவலகத்தின் திருத்த வேலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பாடசாலை வகுப்பறை திருத்தி அமைக்கப்பட்டு கணினி ஆய்வுகூடமாக மாற்றப்பட்டது. மேலும் இக்கணினி ஆய்வுகூடத்தில் மாணவர்களுக்கான வசதிகள் மற்றும் ஸ்மார்ட் போர்ட் என்பன கற்றல், கற்பித்தல் சாதனங்களாக காணப்படுவது சிறப்பம்சமாகும்.



# குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் முஸ்லிம் காங்கிரஸில் இணைவு



(கந்தளாய் நிருபர்)

சல்மான் பாரிஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் (09) இணைந்துகொண்டார்.

குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் முபாரக்கின் முயற்சியுடனும் கட்சி ஆதரவாளர்களின் பூரண ஆதரவுடனும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.தௌபீக், அரசியல் உயர்பீட உறுப்பினர் ஜே.அன்ஸார் ஹாஜியார், முத்தலிப் நானா, நகரசபை உறுப்பினர் மஹ்ஸூம் ஆசிரியர், கலீல் லெப்பை, சலாஹுதீன் மௌலவி மற்றும் ஏனைய கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

# உதவித் தேர்தல் ஆணையாளருக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல்



(மட்டக்களப்பு நிருபர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் அலுவலர்களுக்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூப ரஞ்சினி முகுந்தனின் வழிகாட்டுதலில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்தல் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளரினால் தெளிவுபடுத்தப்பட்டது. வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதியில் வீதி ஒழுங்கு மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் பாதுகாப்பு அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், வேட்புமனுக்களை ஒப்படைக்கும் போது வாகனங்கள் உள்நுழைதல், வெளிச்செல்லுதல் மற்றும் வேட்புமனுவை ஒப்படைக்கும் நபர்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எதிர்வரும் 18ஆம் திகதியிலிருந்து இறுதி நாளான 21ஆம் திகதிவரை பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதுடன், மட்டக்களப்பு தேர்தல் அலுவலகத்திற்கு முன்னாள் பொலிஸ் தற்காலிக சோதனைச் சாவடி அமைப்பதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி தலைமையிலான பொலிஸ் உயர் அதிகாரிகள் பங்குபற்றினர்.

# பிரேஸிலில் வன்முறை; 1500 பேர் கைது



## அடித்து நொறுக்கப்பட்டன நாடாளுமன்றம் உயர் நீதிமன்றம் - ஜனாதிபதி மாளிகை

## முன்னாள் ஜனாதிபதி போல்சனரோ வைத்தியசாலையில் அனுமதி



ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியை ஏற்க மறுத்ததால் பிரேஸிலில் வரலாறு காணாத வன்முறை வெடித்தது. வன்முறையில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் 1,500இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரேஸிலில் தேர்தல் தோல்வியை ஒப்புக் கொள்ளாத முன்னாள் ஜனாதிபதி போல்சனரோவின் ஆதரவாளர்கள் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நேற்று முன்தினம் அந்நாட்டு நாடாளுமன்றம், உயர் நீதிமன்றம், ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றை முற்றுகையிட்டனர்.

கலவரம் தொடர்பான காணொளிக் காட்சிகள் வெளியான நிலையில், ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதனிடையே கலவரம் மற்றும் ஆட்சிக் கவிழ்ப்பு செயல்களை நிராகரிப்பதாக அந்நாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் தலைவர்கள் மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் கூட்டாக ட்விட்டரில் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

தற்போதைய நிலையில், மூவரும் விடுத்த கூட்டறிக்கை, அரிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. இதனிடையே கலவரம் தொடர்பாக அந்நாட்டு அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி ஜனாதிபதி லூலா டா சில்வா விவாதித்துள்ளார்.

இதேவேளை, பிரேஸில் வன்முறைக்கு ஐ.நா. மற்றும் அமெரிக்கா, இந்தியா, இலங்கை உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

**வைத்தியசாலையில் போல்சனரோ**

இதேவேளை தனது ஆதரவாளர்கள் பிரேஸிலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், போல்சனேரோ உடல்நலக்குறைவு காரணமாக அமெரிக்காவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஓர்லெண்டோ மாகாணத்திலுள்ள மருத்துவமனையில் போல்சனேரோ திங்கட்கிழமை (09) வயிற்று வலி உள்ளிட்ட பிரச்சினைகளால் சேர்க்கப்பட்டுள்ளார். போல்சனேரோவின் உடல்நிலை தற்போது சீராக உள்ள நிலையில், அவரை மருத்துவக்குழுவினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

உலகின் 4ஆவது பெரிய ஜனநாயக நாடான பிரேஸிலில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தல் கடந்த ஆண்டு ஒக்டோபர் 2 மற்றும் 30ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது.

இதில் முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இன்னாசியோ லுலா டா சில்வா (Luiz Inacio Lula da Silva) வெற்றிபெற்றார். ஜனாதிபதி ஜெய்ர் போல்சனரோ (Jair Bolsonaro) தோல்வியடைந்தார். ஆனால், மின்னணு இந்திரத்தில் முறைகேடு நடந்ததாக தெரிவித்து போல்சனரோ உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து லுலா டா சில்வா வெற்றி பெற்றதாக அறிவித்தது.



இதனையடுத்து மிகவும் தாமதமாக லுலா டா சில்வா கடந்த முதலாம் திகதி பதவியேற்றார். இதில் கலந்துகொள்ளாத போல்சனரோ உடனடியாக புளோரிடா சென்றுவிட்டார்.

மேலும், தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டினார். இதனால் ஆத்திரமடைந்த அவரது ஆதரவாளார்கள் அந்நாட்டின் நாடாளுமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட கட்டடங்களை முற்றுகையிட்டதுடன், அங்குள்ள பொருட்களை அடித்து நொறுக்கி கட்டடங்களை சேதமாக்கி வன்முறையில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ''தேர்தலுக்குப் பின்னர் அமைக்கப்பட்டுள்ள லூலா டி சில்வாவின் அரசைக் கவிழ்த்து விட்டு போல்சனரோவை ஜனாதிபதியாக்க வேண்டும். அல்லது இராணுவமே ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும்'' என்று வலியுறுத்தியதுடன், நாடாளுமன்றம், உயர் நீதிமன்றம், ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட கட்டடங்களுக்குள் நுழைந்து அங்குள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க மற்றும் கலைப்பொருட்களை அடித்து நொறுக்கியதுடன் கட்டடங்களையும் சேதப்படுத்தினர்.

இதையடுத்து இராணுவத்தினர் தலையிட்டு போராட்டக்காரர்களை, தடியடி, கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி அப்புறப்படுத்தியுள்ளனர். 1,500இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

''இத்தகைய வன்முறைக் கலவரத்தில் ஈடுபடுவதற்கு 'பாசிச வெறியர்'களை போல்சனரோ தூண்டி விடுவதாக ஜனாதிபதி லூலா டி சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

பொல்சொனாரோ ஆதரவாளர்களால் முற்றுகையிடப்பட்டிருந்த மூன்று முக்கிய அரசு வளாகங்களையும் பாதுகாப்புப் படையினர் கடந்த திங்கட்கிழமை மீட்டனர்.

# உலக செய்திகள்

## ஹஜ் கட்டுப்பாடுகளை நீக்கியது சவூதி அரசு

மக்காவுக்கு ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்வோர் குறித்த எண்ணிக்கை கட்டுப்பாடுகளை சவூதி அரேபிய அரசு அறிவித்துள்ளது.



கடந்த 3 ஆண்டுகளாக கொரோனா பரவல் காரணமாக ஹஜ் பயணிகள் வருகைக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

தற்போது அந்தத் தடையை விலக்கி கொள்வதாக சவூதி அரேபிய அரசு அறிவித்துள்ளது. இந்த ஆண்டு ஹஜ் யாத்ரீகர்களின் வருகை எண்ணிக்கையில் எந்தத் தடையும் இல்லை என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

## சுயெஸ் கால்வாயில் சிக்கிய நோர்வேயின் 'எம்.வி.குளோரி'




உலகின் மிக முக்கிய நீர்வழிப்பாதையான சுயெஸ் கால்வாயில் மீண்டும் ஒரு சரக்கு கப்பல் சிக்கிக்கொண்டுள்ளது.

எகிப்தில் அமைந்துள்ள சுயெஸ் கால்வாய் உலகின் மிக முக்கிய நீர்வழிப்பாதையாக இருந்து வருகிறது. எண்ணெய், இயற்கை எரிவாயு உள்ளிட்ட பல்வேறு சரக்குகள் பல நாடுகளிலிருந்து இந்த கால்வாய் வழியாகத்தான் கொண்டு செல்லப்படுகின்றன. எனவே, உலகளாவிய விநியோகச் சங்கிலியின் முக்கிய இணைப்பாக சுயெஸ் கால்வாய் விளங்குகிறது.

இந்நிலையில், நோர்வேயைச் சேர்ந்த எம்.வி. குளோரி என்ற சரக்குக் கப்பல், சுயெஸ் கால்வாயில் இஸ்மாலியா மாகாணத்திலுள்ள கந்தாரா நகர் அருகே நேற்று முன்தினம் தரை தட்டி நின்றது. மோசமான வானிலை நிலவியதால் கால்வாயில் அலைகள் எழும்பியதன் காரணமாக கப்பல் தரை தட்டியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து உடனடியாக 3 இழுவைக் கப்பல்கள் மூலம், தரை தட்டிய கப்பலை மீண்டும் கடலில் மிதக்க விடும் பணியில் கப்பல் நிறுவனம் ஈடுபட்டது. தீவிர முயற்சிக்குப் பின்னர் குளோரி கப்பல் கடலில் மிதக்க விடப்பட்டிருப்பதாக அக்கப்பல் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கப்பல் தரை தட்டியதால் நேற்று முன்தினம் அவ்வழியாக செல்லவிருந்த 51 கப்பல்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டதா இல்லையா என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை. கடந்த 2021ஆம் ஆண்டு சுயெஸ் கால்வாயின் ஒற்றைப் பாதை தடத்தில் 'எவர் கிவன்' எனும் பிரம்மாண்ட சரக்கு கப்பல் குறுக்கும் நெடுக்குமாக தரை தட்டி நின்றதால் ஒட்டுமொத்த போக்குவரத்தும் ஸ்தம்பித்து, உலகளாவிய விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷியாவை உலுக்கிய 7.7 ரிச்டர் நிலநடுக்கம்



இந்தோனேஷியாவில் 7.7 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், சில மணிநேரங்களின் பின்னர் இந்த எச்சரிக்கை மீளப் பெறப்பட்டுள்ளது. இந்தோனேஷியாவின் தனிம்பார் பகுதியில் பூமிக்கயில் 97 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம், 7.7 ரிச்டர் அளவில் பதிவானதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டடங்கள் அதிர்ந்ததால் அச்சமடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர். பல வீடுகள், கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்ற நிலையில், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சேத விவரங்கள் வெளியாகவில்லை.

இந்நிலநடுக்கம் அவுஸ்திரேலியாவின் டார்வின் பகுதியிலும் உணரப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நேற்று முன்தினம் பசிபிக் தீவு நாடான வானூட்டில் (Vanuatu) 7.0 ரிச்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்த நிலையில், அங்கு கடலோரப் பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒஸ்கார் விருதுக்கு 'காந்தாரா' பரிந்துரை

கன்னடத்தில் வெளியான 'காந்தாரா' திரைப் படம் ஒஸ்கார் விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சிறந்த படம் மற்றும் சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதுப் பட்டியலில் 'காந்தாரா' பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பிரிவுகளில் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள 301 திரைப்படங்களில் 'காந்தாரா' திரைப்படமும் இணைந்துள்ளது.

ஹோம்பேல் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் ரிஷப் ஷெட்டி இயக்கி நடித்துள்ள 'காந்தாரா' திரைப் படம் ஒஸ்கார் விருதுக்கான பரிந்துரைப் போட்டியில் இரண்டு பிரிவுகளில் இடம்பெறத் தகுதி பெற்றுள்ளது. இப்படம் கன்னடத்தில் கடந்த செப்டெம்பர் 30ஆம் திகதி திரையரங்குகளில் வெளியானது. படத்திற்குக் கிடைத்த வரவேற்பின் காரணமாக அடுத்தடுத்து தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் படம் வெளியிடப் பட்டது.

ரூ.16 கோடியில் உருவாக்கப்பட்ட இப்படம் உலகம் முழுக்க ரூ.400 கோடி வரை வசூலித்தது. இதனிடையே, 'காந்தாரா' திரைப்படம் 2023ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருதுக்கான பரிந்துரைக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அத்திப்பட்டியாகும் உத்தரகாண்டின் ஜோஷிமத்



### முழு கிராமமே நிலத்துக்குள் புதையும் அபாயம்: மக்களை அகற்றும் பணி தீவிரம்

உத்தரகாண்ட் மாநிலத்தின் சுற்றுலாத்தலமான ஜோஷிமத் கிராமம் நிலத்துக்குள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு வசிப்பவர்கள் அதிவேகமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

கடந்த 48 மணிநேரத்தில் மட்டும் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 603 ஆக அதிகரித்துள்ளது. சாமோலி மாவட்ட நிர்வாகம் மக்களை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த விவகாரம் குறித்து நிபுணர்களின் உயர்மட்டக் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார். இதையடுத்து மத்திய அரசின் பேரிடர் அமைப்புகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றன. புவியியலாளர் பியூஷ் ரவுடேலா (Piyoosh Rautela) கருத்துப்படி, ஜனவரி 2 மற்றும் 3ஆம் திகதிக்கு இடைப்பட்ட இரவில் வெடித்த நிலத்தடி நீர்நிலையிலிருந்து வெளியேற்றப்பட்ட நீர், நகரத்திலுள்ள வீடுகள் மற்றும் பிற கொன்கிறீட் கட்டமைப்புகளில் விரிசல்களை உருவாக்கியது.

இந்த நிலத்தடி நீர் ஆதாரத்திலிருந்து ஒவ்வொரு நிமிடமும் 400 முதல் 500 லீற்றர் நீர் வெளியேறுகிறது. இந்த பனிக்கட்டி நீரால், புவியியல் பாறையில் அரிப்பு ஏற்படுகிறது என்றும் இருப்பினும், இந்த நிலத்தடி நீர் ஆதாரத்தின் அளவு என்ன, அது ஏன் திடீரென வெடித்தது என்பது தெரியவில்லை என்றும் புவியியலாளர் பியூஷ் ரவுடேலா தெரிவித்துள்ளார்.

## ஓசோனில் ஓட்டை விரைவில் சீராகும் என்கிறது ஐ.நா.

பூமியின் மேற்பரப்பில் ஓசோன் படலத்தில் காணப்படும் ஓட்டை அடுத்த 20 ஆண்டுகளில் சீராகுமென ஐ.நா. அறிவித்துள்ளது.

சூரியனின் புற ஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களை பாதுகாக்கும் படலமே ஓசோன் என்று கருதப்படுகிறது. இதில், வளி மண்டல அடுக்கை அழிக்கும் வான்வழி இரசாயனங்கள் குறைந்து வருவதாகவும், இதனால் 20 ஆண்டுகளுக்குள் ஓசோன் படலம் சீராகும் என்றும் ஐ.நா.வின் சுற்றுச்சூழல் திட்டம் தொடர்பான அமைப்பின் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2040ஆம் ஆண்டுக்குள் உலகம் முழுவதும் 1980ஆம் ஆண்டிலிருந்த நிலைக்கு திரும்பும் என்றும், ஆர்க்டிக் துருவம் 2045ஆம் ஆண்டுக்குள்ளும் அண்டார்டிக் துருவம் 2066ஆம் ஆண்டுக்குள்ளும் 1980ஆம் ஆண்டிலிருந்த நிலைக்கு திரும்பும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு; பாகிஸ்தானில் கடும் நெருக்கடி

### கூட்ட நெரிசலில் சிக்கி நால்வர் பலி - பலர் படுகாயம்

பாகிஸ்தானில் கோதுமை மாவுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தற்போது பாகிஸ்தான் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளது. அங்கு ஒரு கிலோ கோதுமை மாவு 1500 ரூபா வரை விற்கப்படுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்கு அரசு குறைந்த விலையில் கோதுமை மாவு வழங்கி வரும் நிலையில், அதனை வாங்க முயன்றபோது கூட்ட நெரிசலில் சிக்கி 3 பெண்கள் உட்பட 4 பேர் இதுவரை உயிரிழந்திருப்பதாகவும், பலர் காயமடைந்திருப்பதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு போதுமான அளவு கோதுமையை இருப்பு வைக்காததே தற்போதைய பிரச்சினைக்குக் காரணமென பாகிஸ்தான் அரசு மீது அந்நாட்டு மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7